வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 03 18.04.2022 திங்கட்கிழமை இதழ் : 133 பக்கங்கள் : 16


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

காலிமுகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவாக

## பண்ணையில் நேற்றிரவு தீப்பந்தப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 18

காலிமுகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ். நகரின் பண்ணை சுற்றுவட்டத்தில் நேற்றிரவு தீப்பந்தப் போராட்டம் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒன்றிணைந்த இளை யோர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட் டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவர் தலை மையிலான அரசாங்கமும் வீட்டுக்கு போக வேண்டும் என்று வலியுறுத்தி காலி முகத்திடலில் நேற்று ஒன்பதா



வது நாளாகவும் போராட்டம் தொடர்ந்தது. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாகவே யாழ்ப்பாணத் தில் தீப்பந்தப் போராட்டம் நடைபெற்றது.

நேற்றிரவு 7 மணியளவில் பண்ணைப் பாலத் 15

# இடைக்கால அரசாங்கத்துக்கு தலைமையேற்க நான் தயார்!

## ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

### பிரச்னைகளுக்கு 18 மாதத்தில் தீர்வாம்

கொழும்பு, ஏப்ரல் 18

“மக்கள் விரும்பினால் இடைக்கால அரசாங் கத்துக்கு தலைமை ஏற்று, நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க தயார்”, என்று முன்னாள் பிரதமரும் தற்போதைய எம்.பி.யுமான ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். 15



## புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கும்

கொழும்பு, ஏப். 18

புதிய அமைச்சரவை யின் முதலாவது அமைச் சரவைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை இடம்பெறக்கூடும் என அரச வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின் றது.

புதிய அமைச்சரவை, இன்று காலை, ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னி லையில் பதவி 15

## போராட்ட கண்காணிப்பில் மனித உரிமை ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 18

காலி முகத்திடலில் இடம்பெற்று வரும் போராட்டங்களை கண் காணிப்பதற்காக இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தின் நடவடிக்கைகள் அமைதி யான முறையில் நடைபெறுகிறதா, எதிர்ப்பு வெளி 15

## காலிமுகத்திடலில் தமிழில் தேசிய கீதம்!

காலிமுகத்திடல், ஏப். 18

காலிமுகத்திடல் போராட்ட களத்தில் நேற்று தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திட லில் கூடி பல்லாயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். 15

## பாடசாலை நேரம் அதிகரிப்பை இடைநிறுத்தியது கல்வியமைச்சு

கொழும்பு, ஏப். 18

முதலாம் தவணைக் காக பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் பாட சாலை நேரத்தை ஒரு மணி நேரத்தால் நீடிக்கும் தீர்மா னம் இடைநிறுத் 15

## பெற்றோல் ரூ. 35 டீசல் ரூ.75ஆல் விலை உயர்வு

கொழும்பு, ஏப். 18

நேற்று நள்ளிரவு நடைமுறைக்கு வரும் வகையில் ஒரு லீற்றர் பெற்றோல் 35 ரூபாயா லும், ஒரு லீற்றர் டீசல் 75 ரூபாயாலும் அதிகரித் துள்ளது லங்கா ஐ. ஓ. சி. நிறு வனம். 15

## அமைதி போராட்டத்துக்கு எதிராக படை அதிகாரம் பிரயோகிக்கப்படாது

### பாதுகாப்பு செயலர் விசேட அறிக்கை

கொழும்பு, ஏப். 18

அமைதியாக போராட்டத்தில் ஈடுபடு பவர்களுக்கு எதிராக இராணுவ அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பிரயோகிக்க எவ்வித ஆயத்தமும் இல்லை என்று ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள் ளார்.

ஜனநாயக முறையில் முன்னெடுக்கப்படும் அமைதிப் போராட்டங் களைக் கட்டுப்படுத்து வதற்கு இராணுவத்தினர் எவ்விதத்திலும் பயன் படுத்தப்பட மாட் டார்கள் என்றும் அவர் தெரிவித் 15

## போராளிகளால் ஒளிர்ந்த ஜனாதிபதி செயலகம்




காலிமுகத்திடலில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடி வரும் போராட்டக்காரர்கள் நேற்றிரவு ஜனாதிபதி செயலகம்மீது ஒளியை பாய்ச்சி தமது கோஷங்களை பரப்பி நூதனப் போராட் டத்தில் ஈடுபட்டவேளை...!

## ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதிகோரி காலிமுகத்திடலில் போராட்டம்!

### நாடு முழுவதும் நேற்று கவனவீர்ப்பு

கொழும்பு, ஏப். 18

உயிர்த்த ஞாயிறு கொடூர தாக்குதல் நடத்தப்பட்டு 3 ஆண்டுகள் நிறை வடையும் நிலையில் - உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று இந்தத் தாக்குதலுக்கு நீதி கோரி கொழும்பு - காலிமுகத்திடலில் கவனவீர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றன.

காலிமுகத்திடல் “கோட்டா கோ கம” போராட்டக்களத்தில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு வருவோர் உயிர்த்த ஞாயிறு தாக் குதலுக்கு நீதி கோரி கவனவீர்ப் பில் ஈடுபட்டனர். 15

## நானே அடுத்த ஜனாதிபதி; ஊழல்வாதிகளை தண்டிப்பேன்!

### அக்கரைப்பற்றில் சஜித்!

அக்கரைப்பற்று, ஏப். 18

நிச்சயமாக எமது அரசாங்கம் அமை யப் போகின்றது. நான் ஜனாதி பதியாக வருவேன். எமது அரசாங்கத்தில் இப் போது இலஞ்சம், ஊழல், கொள்ளை யிலே சம்பந்தப்பட்டவர்கள் அனை வரையும் சட்டத்துக்கு முன் நிறுத்தி தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

- இவ்வாறு கூறியிருக்கிறார் 15

## இப்படியும் நடக்கிறது...!

முன்னரும் ஒரு தடவை இந்த விடயத்தை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், அதனை இவ்வளவு விரிவாக சொல்லவில்லை.

மைத்திரிபால சிறிசேன ஆட்சியிலிருந்தபோது, ஒரு நாள் அவரது இணைப்புச் செயலாளர் இந்த ஊர்க்குருவியுடன் பேசினார். தமிழர் அரசியல் நிலைமைகள் குறித்து நீண்ட நேரம் பேசிய அவரிடம், தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பாக, கூட்டமைப்பினர் தமக்கு அந்த நல்லாட்சி அரசுடன் இருக்கும் நட்பைப் பயன்படுத்தி, தமிழ் மக்களுக்கு உடனடியாக செய்யக்கூடிய பல விடயங்களை செய்யவில்லையே என்ற எனது ஆதங்கத்தை பகிர்ந்துகொண்டேன்.

அதற்கு அவர், என்னிடம் ஒரு கோரிக்கையை விடுத்தார். 'யாழ்ப்பாணத்திலிருந்து சில புத்திஜீவிகள் குழு ஒன்றை ஜனாதிபதியை சந்திக்க அழைத்துவாருங்கள். அப்போது, அவரால் உடனடியாக செய்யக்கூடிய இருபது விடயங்களை பட்டியலிட்டு அவரிடம் சமர்ப்பியுங்கள். நான் அவற்றை உடனேயே செய்துதர நடவடிக்கை எடுக்கின்றேன்' என்றார்.

அவரது கோரிக்கை, ஜனாதிபதி தனகிருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தி, வேறு எவரிடமும் ஆலோசனை கேட்காமலே செய்யக்கூடிய விடயங்களை கேளுங்கள், அதனை அந்த சந்திப்பிலேயே உடன் செய்துதர ஏற்பாடு செய்கின்றேன் என்பதுதான்.

இப்படி செய்தால், அதைப்போல நமது அரசியல்வாதிகளும் செய்விக்கக்கூடிய விடயங்களை செய்விப்பார்கள் என்பது அவரது நோக்கமாக இருந்திருக்கவேண்டும்.

அப்போது அவர், இன்னுமொரு விடயத்தையும் சொன்னார். விரைவில் அரசாங்கம் மயிலிட்டி துறைமுகத்தை விடுவிக்கவிருக்கின்றது. அதனையும் உங்கள் கோரிக்கையில் சேர்த்தீர்களானால், அதுவும் உங்கள் கோரிக்கையால் நடந்ததாக தமிழ் மக்கள் நம்புவார்கள் என்றார். அந்த விடயத்தை மாத்திரமே ஒருதடவை இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், அதன் பின்னர் நடந்த ஒரு விடயமே எனக்கு இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

அவர் இவ்வாறு சொன்ன பின்னர், அதுகுறித்து யோசனை பெறுவதற்காக சில பிரமுகர்களுடன் கலந்து பேசினேன். பலர் அதற்கு ஆதரவாக கருத்துச் சொன்னார்கள்.

ஒருவர், ஜனாதிபதியிடம் கேட்கக்கூடிய விடயங்கள் பலவற்றை பட்டியலிட்டு மறுநாளே அனுப்பி வைத்தார். ஜனாதிபதியை சந்திக்க தானும் வரலாம் என்றும் கூறியிருந்தார்.

இதுகுறித்து கலந்து பேசுவதற்காக, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து ஓய்வுபெற்ற ஒரு முன்னாள் பேராசிரியரையும் ஒருநாள் அழைத்திருந்தேன். அவர் தமிழ் தேசிய அரசியலிலும் சமூக சேவையிலும் அக்கறை காட்டுகின்ற ஒருவர்.

ஜனாதிபதியின் இணைப்பாளர் தெரிவித்த விடயத்தை அவருக்கு விளக்கமாக சொல்லிவிட்டு, அவரால் எவரிடமும் ஆலோசனை கேட்காமலே செய்யக்கூடிய சில விடய்ஙகளை நீங்களும் பட்டியலிட்டு தாருங்கள் என்று கோரிக்கை வைத்தேன்.

அதற்கு அவர், எந்த தயக்கமும் இல்லாமல், 'இராணுவத்தை உடன் வெளியேற்றுமாறு கேட்போம்' என்றார்.

நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையின் தலைப்புச் செய்தியைப் படித்தபோது, இந்த விடயம்தான் எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.

'நாட்டின் ஆட்சியை ஒரு வருடத்துக்கு தமிழ்த்தரப்பிடம் வழங்குங்கள். ஒரு வருடத்தில் இந்த நாட்டை நிமிர்த்திக் காட்டுகின்றோம்' என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார் என்பதுதான் அந்த தலைப்புச் செய்தி.

ஒரு நண்பர் இந்த தலைப்புச் செய்தியைப் படித்துவிட்டு தொலைபேசியில் தொடர்புகொண்டு சொன்னார், தமது தலைவர்களின் அரசியல் அறிவுக்கு முன்னால், நாம் மண்டியிடவேண்டும் என்று.

அவருக்கும் மேலே எழுதியுள்ள கதையைக் கூறி, நமது பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து ஓய்வுபெற்ற ஒருவரே அவ்வாறு கூறுகின்றபோது, செல்வம் சொல்வதைக் கேட்டு நீங்கள் கோபப்படக்கூடாது என்று, அந்த நண்பரை சமாதானப்படுத்தினேன். அதற்காக, யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள் கோபப்படக்கூடாது. அண்மையில் நமது உபவேந்தர் சில விடயங்களை பொறுப்புணர்வுடன் சுட்டிக்காட்டியிருந்தமை இன்றும் இந்த ஊர்க்குருவியின் மனதில் அவரை பெருமையுடன் நினைவுகொள்ள வைக்கின்றது.

நாடு பொருளாதார நெருக்கடியால் தள்ளாடிக்கொண்டிருக்கின்றது. மக்கள் இந்த அரசை வீட்டுக்குப் போ என்று கோஷமிட்டுக்கொண்டிருக்கின்றனர். நாடு இன்றுள்ள நெருக்கடியில், தமிழ் மக்கள் எத்தகைய அரசியல் நகர்வை மேற்கொள்ளவேண்டும் என்று யோசிக்கவேண்டிய நமது தலைவர்கள், வடிவேலு பாணியில் நகைச்சுவை பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பத்தியில் அடிக்கடி சொல்வதுபோல, நமது தலைவிதியை எண்ணி நாமே நொந்துகொள்வதைத் தவிர, வேறு மார்க்கம் தெரியவில்லை.

**- ஊர்க்குருவி**

# அமைச்சரவை மாற்றத்தை மக்கள் ஏற்கப் போவதில்லை!

## சுதந்திரக் கட்சி சொல்கிறது

கொழும்பு, ஏப். 18

மீண்டும் அமைச்சரவை மாற்றத்தை பொது மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜயசேகர, தற்போதைய நிலையில் வெறுமனே தலை மாற்றத்தை ஏற்றுக்கொள்ள பொதுமக்கள் தயாராக இல்லை என தெரிவித்தார்.

தற்போதைய நிர்வாகத்தின் நடத்தையால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதால், ஒட்டுமொத்த அமைச்சரவையையும் ராஜிநாமா செய்யுமாறு கோரியுள்ளனர்.

நாட்டை நடத்துவதற்கு ஒரே மாதிரியான ஆட்கள் தொடர்வதை ஏற்க முடியாது என்றும், பொதுமக்களின் உணர்வைப் பிரதிபலிக்காது என்றும் அவர் கூறினார்.

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் ஆவணத்தில் உள்ளடங்கியுள்ள அனைத்து விபரங்களையும் அறியாமல் கையொப்பமிடத் தயாராக இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

வெற்று ஆவணத்தில் கையெழுத்திடுவார்கள் என்று எதிர்க்கட்சிகள் எதிர்பார்க்க முடியாது என்றார்.

பிரேரணையை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்றத்தில் எந்தவொரு கட்சிக்கும் 113 வாக்குகள் தேவைப்படும் என்பதால் ஏனைய கட்சிகளுடன் முதலில் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும் எனவும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவையும் பெற வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஜயசேகர தெரிவித்தார்.

நம்பிக்கையில்லா பிரேரணையை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்றாலும், அரசியலமைப்பின் 21வது திருத்தத்தை அமுல்படுத்துவதே காலத்தின் தேவையாகும் - என்றும் கூறினார். (ஐ)

## இரு இளைஞர்கள் தமிழகத்தில் கைது

சென்னை, ஏப். 18

இலங்கையை சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள், தமிழகத்தின் தஞ்சை பட்டுக்கோட்டை அருகே கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக கடலோர பாதுகாப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய, குறித்த இரு இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனரென தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர்களிடம் உரிய ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதற்கமைய, குறித்த இரு இளைஞர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## "அமைச்சு பதவியை ஏற்க மாட்டேன்!"

கொழும்பு, ஏப். 18

புதிய அமைச்சரவையில் எந்தப் பதவியையும் ஏற்கப்போவதில்லை என்று முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர், ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் கலாநிதி சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## உடலில் நஞ்சு பரவியதாலேயே வடமராட்சி மாணவி மரணம்!

வடமராட்சி, ஏப். 18

வடமராட்சி - கரவெட்டியில் மரணமான 18 வயது யுவதி உடலில் நஞ்சு பரவியதாலேயே உயிரிழந்தார் என்று உடற்கூற்று பகுப்பாய்வில் தெரிய வந்துள்ளது.

க.பொ.த உயர்தரத்தில் கற்கும் 18 வயது மாணவி நேற்று முன்தினம் உயிரிழந்திருந்தார். வீட்டில் திடீரென நோய்வாய்ப்பட்டார் என குறிப்பிட்டு, மாணவியை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆனால், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மாணவி மர்மமான முறையில் உயிரிழந்தமை தொடர்பில், நெல்லியடி பொலிஸார், பருத்தித்துறை நீதிமன்றத்தில் பி அறிக்கை தாக்கல் செய்தனர். மாணவியின் சடலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்த நீதிமன்றம் கட்டளையிட்டது.

பிரேத பரிசோதனையில் மாணவி இரண்டு மாத கர்ப்பவதியாக இருந்தமை உறுதியானது. அத்துடன், அவரது உடலில் நஞ்சு பரவியதாலேயே மரணம் நிகழ்ந்ததாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

எனினும், அவரின் உடலில் எப்படி நஞ்சு கலந்தது என்பதை பிரேத பரிசோதனையில் கண்டறிய முடிவில்லை.

இதையடுத்து, மாணவியின் உடல் பாகங்கள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான விரிவான விசாரணையை நடத்த நெல்லியடி பொலிஸாருக்கு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

அத்துடன், மாணவியின் கர்ப்பத்துக்கு காரணமான இளைஞரை அடையாளம் காணும் முயற்சியிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ஐ - 2)

## பொலிஸ் இணையம்மீது சைபர் குற்ற தாக்குதல்!

கொழும்பு, ஏப். 18

பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம்மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், குறித்த இணையத்தளம் செயலிழந்துள்ளதாகவும் அதனைச் சீர் செய்யும் முயற்சியில் சம்பந்தப்பட்ட தரப் புக்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## கழிவுகளை வீதியில் வீசியவர்கள் இளைஞர்களிடம் வசமாக சிக்கினர்!

மட்டக்களப்பு, ஏப். 18

இறைச்சி கழிவுகளை வீதியில் வீசிய இருவரை இளைஞர்கள் பிடித்து கடுமையாக எச்சரித்ததுடன், அந்தக் கழிவுகளையும் அவர்கள் வந்த முச்சக் கர வண்டியிலேயே ஏற்றி அனுப்பி வைத்தனர்.

களுவாஞ்சிக்குடி - துறைநீலாவணை பிரதான வீதியில் நேற்றுக் காலை மருதமுனையைச் சேர்ந்த இருவர் கோழி இறைச்சி கழிவுகளை பொலித்தீன் பைகளில் இட்டு அதனை முச்சக்கர வண்டியில் ஏற்றி வந்து துறைநீலாவணை வீதியில் வீசினார்கள்.

அவர்களை பின்தொடர்ந்த துறைநீலாவணை இளை ஞர் குழு அவர்களை மடக்கிப் பிடித்து வீசிய இறைச்சிக் கழிவுகளை முச்சக்கர வண்டியிலேயே ஏற்றி அனுப்பி வைத்தனர்.

அத்துடன், இது தொடர்பில், களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர், களுதாவளை பிரதேச சபை தவிசா ளர் மற்றும் செயலாளர், துறைநீலாவணைக்கான பிர தேச சபை உறுப்பினர், களுவாஞ்சிகுடி சுற்றாடல் பொறுப்பதிகாரி, கிராம சேவை அதிகாரி ஆகியோருக் கும் அவர்கள் முறைப்பாடுகளை வழங்கியிருந்தனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
18.04.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், சித்திரை 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஏன் இந்த அவசரம்?

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இது தொடர்பில் இதுவரையில் எந்தவோர் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. அதேவேளை, நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவந்தாலும்கூட, அது வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

ஏனெனில், அரசாங்கத்திலிருந்து வெளியேறி, சுயாதீனமாக செயல்படப் போவதாக அறிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் - நிச்சயமாக, சஜித் பிரேமதாஸவை ஏற்றுக்கொள்ளவில்லை. அதேபோன்று சஜித் பிரேமதாஸவும் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. குறிப்பாக விமல் வீசவன்ஸ போன்றவர்களை உள்வாங்கப் போவதில்லையென்று, சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார். எனவே நம்பிக்கையில்லா பிரேரணைக்கு அனைத்து தமிழ் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களும் வாக்களித்தாலும்கூட, நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றி பெறுவதற்கான வாய்புக்கள் இல்லை.

இதேவேளை, இனப்படுகொலை, போர்குற்றங்கள் தொடர்பில் பிரசாரங்களை முன்னெடுத்துவரும் தமிழ் தேசிய தரப்புக்கள் ஆதரிக்கும், நம்பிக்கையில்லா பிரேரணையொன்றில் கையெழுத்திடுவதன் மூலம், தங்கள் தென்பகுதி அரசியல் நெருக்கடிக்குள்ளாகலாம் என்று கருதும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் நிச்சயம், இதனை ஆதரிக்க மாட்டார்கள்.

ஒருவேளை ஆதரித்தாலும் விடுதலைப் புலி சார்பானவர்களோடு இணைந்து ராஜபக்ஷக்களை தோற்கடிக்க முற்படுகின்றனர் என்னும் பிரசாரத்தையும் ராஜபக்ஷ ஆதரவாளர்கள் மேற்கொள்ளலாம். இந்த அடிப்படையில் சிந்தித்தாலும், ராஜபக்ஷ அதிருப்தியாளர்கள், சஜித் தலைமையிலான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிக்க வாய்பில்லை. எனவே, விடயங்களை எந்த நோக்கில் பார்த்தாலும், நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றிபெறுவதற்கான வாய்புக்கள் இல்லை.

நிலைமை இவ்வாறிருக்கின்றபோது, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஏன் இந்த விடயத்தில் இந்தளவு அவசரத்தை காண்பிக்க வேண்டும்? விடயங்களை விளங்கிக் கொள்ள முடியவில்லையா அல்லது, விளங்கிக் கொண்டே செயல்படுகின்றனரா?

உண்மையில், இந்த விடயத்தில் கூட்டமைப்புத்தான் அவசரத்தை, காண்பித்திருக்க வேண்டும் ஏனெனில், கடந்த ஜனாதிபதி தேர்தலில் கூட்டமைப்பு சஜித் பிரேமதாஸவையே ஆதரித்திருந்தது. கோட்டாபயவை தோற்கடிக்க வேண்டும் என்பதே கூட்டமைப்பினதும் தமிழ் மக்களினதும் விருப்பமாக இருந்தது. ஆனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ, தேர்தலை பகிஸ்கரிக்குமாறு அறிவித்திருந்தார். இது சிங்களவர்களின் பிரச்னை, இதில் தமிழ் மக்கள் தலையீடு செய்ய வேண்டியதில்லை என்பதே முன்னணியின் நிலைப்பாடாக இருந்தது. கோட்டாபய வெற்றி பெற்றாலும் அது ஒரு பிரச்னையில்லை என்பதே கஜேந்திரகுமாரின் நிலைப்பாடாக இருந்தது. அவ்வாறாயின், இப்போது கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்க்கும் விடயத்தில் ஏன் இந்தளவு அவசரம் காண்பிக்கப்படுகின்றது?

நம்பிக்கையில்லா பிரேரணையில் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் முந்திக் கொண்டு கையெழுத்திட்டமை, அடிப்படையில், நம்பிக்கையில்லா பிரேரணையில் - வெல்வதற்கு ஏதேனும் சிறிய வாய்புக்கள் இருந்தாலும் கூட, அதனையும் பலவீனப்படுத்தவே பயன்படும். அன்று கோட்டாபய வெற்றிபெற்றாலும் பரவாயில்லை என்னும் நிலைப்பாட்டை கொண்டிருந்தவர்கள் - ஏன், இப்போது கோட்டாபயவை எதிர்க்கும் விடயத்தில் மற்றவர்களை முந்திக் கொள்ள முற்படுகின்றனர்? தாங்கள் முன்னர் செய்தது தவறு என்பதை மக்களுக்கு உணர்த்த முற்படுகின்றனரா? ஆனால், ஒரு விடயம் வெள்ளிடைமலை - அதாவது, இவ்வாறான நகர்வுகள் அடிப்படையில் ராஜபக்ஷக்களின் நிகழ்ச்சி நிரலுக்கே பயன்படும்.

# செல்வம் அடைக்கலநாதனின் “நப்பாசை” !

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை தமிழ் தரப்பிடம் ஒரு வருடம் தாருங்கள் நாம் இந்த நாட்டை மேலோங்கச் செய்து காட்டுகிறோம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் இக்கூற்றை நோக்கும் போது “மூஞ்சூறு தான் போக வழியைக் காணவில்லை. தும்புத்தடியையும் கொண்டு செல்ல முற்பட்டதாம்“ என்ற தமிழ் நாடோடி பழமொழியே நினைவுக்கு வருகின்றது.

முப்பது வருட கால யுத்தத்தில் மட்டுமல்ல. அதற்கு முன்னரும் தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் ஆயுதப் போராட்டக் குழுக்களுமே வடக்கு - கிழக்கு மக்களுக்கு சாபக்கேடாக விளங்கியிருந்தனரே தவிர. வேறு எவருமல்ல. தென்னிலங்கை பேரினவாத கட்சிகள் எப்போதும் போலவே தமிழர்களுக்கு எதிரான போக்கையே கொண்டுள்ளன. ஆனால், அதிலிருந்து அரசியல் ரீதியாகவும் , ஆயுதப்போராட்ட வழியாகவும் மீள்வதற்கு கிடைத்த வாய்ப்புகளை கைவிட்டு விட்டு தற்போது முழுநாட்டையும் ஆட்சி செய்யும் சந்தர்ப்பத்தை தரவேண்டியும் அதன் மூலம் நாட்டை மேலோங்க வைத்துக்காட்டுகிறோம் என்று அடைக்கலநாதன் குறிப்பிடுவது வேடிக்கையிலும் வேடிக்கையாகவே இருக்கின்றது.

“கழுத்தறுப்புகளுடன்” அதிகார மோகத்தோடு சென்று கொண்டிருப்பதே தமிழ் அரசியல் போக்காகும். இதனை நன்கறிந்த நிலையிலேயே தென்னிலங்கை அரசியல் தரப்புகள் வடக்கு-கிழக்கு அரசியல் தரப்பை கையாண்டு வருகின்றனர்.

ஒரு சந்தர்ப்பவாதியான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையே நன்கு எடை போடத்தெரியாது அவரை ஆட்சியில் அமர்த்தி இறுதியாக “இலவு காத்த கிளிகள்“ போலானவர்களே தமிழ் அரசியல் தரப்பினர்.

அன்றைய சந்ததி தமிழ் அரசியல்வாதிகள்கூட சமஷ்டி, சமத்துவம் என்றெல்லாம் பேசிவிட்டு பலாலி விமான நிலையத்தில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் வந்திறங்கும் போது மேளதாளங்களுடன் மாலை மரியாதைகளை வழங்கி துதிபாடியிருந்தனர்.

வடக்கு - கிழக்கில் ஒரு முகமும், பின்னர் தென்னிலங்கை அரசியல்வாதிகளோடு வேறொரு முகமுமாக வடக்கு - கிழக்கு அரசியல் வாதிகளின் அரசியல் போக்கு அமைந்திருந்தது. தாம் உருக்கொடுத்து உருவாக்கிய ஒரு முக்கிய ஆயுதப் போராட்ட அமைப்பையே பின்னர் இந்தியாவுடனும் இலங்கையுடனும் சேர்ந்து வேரறுக்க முன்வந்தவர்களே வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் தரப்பினர்.

பாராளுமன்ற உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் தலைமை தாங்குகின்ற தமிழ் மக்கள் விடுதலை இயக்கமே (ரெலோ) ஆயுதப் போராட்ட அமைப்புகளிடையே தலையெடுத்த சகோதரப்படுகொலைகளின்போது மிக மோசமாக வேட்டையாடப்பட்டிருந்தது.

இதன்பின்னர், ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட், போன்ற அமைப்புகளும் கொலை வெறியாட்டத்துக்குள்ளாகின. இதுதவிர அரசியல் அரங்கில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் வடக்கு - கிழக்கு தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய சிறந்த அரசியல்வாதிகள் பலரும் வேட்டையாடப்பட்டிருந்தனர்.

இந்தியாவின் அனுசரணையோடு கொண்டுவரப்பட்டிருந்த இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் கீழான இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையையே ஒழுங்காக தப்பவைக்க முடியவில்லை. அத்துடன், அதன் நிர்வாகத்தின் மூலம் ஒரு முன்மாதிரியான ஆட்சியதிகார நடவடிக்கையை வெளிப்படுத்த முடியாத நிலையில் தற்போது முழுநாட்டையும் நல்லாட்சி செய்து காண்பிப்போம் என்ற பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சவால் விடுவது வேடிக்கையிலும் வேடிக்கையாக இருக்கின்றது.

ஒற்றுமையீனமும், அதிகாரப் போட்டியுமே தமிழ் அரசியல் கோதாவில் இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் நிலவி வருகின்றது. இதன்காரணமாக வடக்கு - கிழக்கு மக்கள் இழந்தவையே ஏராளம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அரசாங்கம் புலம்பெயர்ந்த தமிழர்களிடமும் தற்போதைய இக்கட்டான நாட்டு நிலவரத்திலிருந்து மீள்வதற்கு உதவி கோர எத்தனிக்கின்றது என்ற தகவல் வெளியானதன் பின்னணியில், ஆட்சியதிகாரத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் தாருங்கள் நாட்டை முன்னேற்றி காட்டுகின்றோம் என்று கூறியிருக்கலாம். ஆனால், அரசாங்கத்துக்குக் கேட்ட மாத்திரத்தில் நிதி உதவி வழங்குவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வேண்டி நிற்கின்ற அரச ஆட்சிக்கு தோள் கொடுக்கவும் புலம்பெயர்ந்த தமிழர்கள் “எடுப்பார் கைப்பிள்ளைகளல்ல“ என்பதை செல்வம் அடைக்கலநாதன் உணர வேண்டும்.

இந்தக் கட்டத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் பலத்தோடு இருந்த காலத்தில் அவர்கள் நடமாடித் திரிந்த பகுதிகளில் ஒலிபரப்பான இரு பாடல்கள் நினைவுக்கு வருகின்றன. அந்தப் பாடலில் ஒன்று “எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே“ என்ற பாடலாகும். மற்றைய பாடல் “நாயே உனக்கும் ஒரு நாடா“ என்று ஆரம்பிக்கும் பாடலாகும்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

எதிர்பார்த்த சுபச்செய்தியால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும் நாள். தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். ஆன்மிகத்தில் ஆர்வம் ஏற்படும். சுபநிகழ்ச்சி பற்றிய முயற்சி நல்லபடியாக முடியும்.

**இடபம்**

எதிர்கால முன்னேற்றம் பற்றிய சிந்தனை துளிர்விடும். பிற்கால நன்மைக்கு வழிவகுக்கும் செயல்களில் ஈடுபடுவீர்கள். புதிய தொழில் முயற்சிகள் லாபம் தருவதாக அமையும்.

**மிதுனம்**

பழைய பிரச்னைகள் நீங்கி மனதில் நிம்மதி கிடைக்கும். இடமாற்றம் பற்றிய முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். பெரியோரின் ஆலோசனை கிடைத்துப் பயன் பெறுவீர்கள்.

**கடகம்**

குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மூலம் நன்மை வரும். இதுவரை அலுவலக வேலையில் இருந்த சுணக்கம் நீங்கும். குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும். நிதி நிலை சீராகும்.

**சிம்மம்**

உறவினர் ஒருவருக்கு நன்மை செய்து பாராட்டுப் பெறுவீர்கள். பணிச்சுமை சற்று அதிகமானாலும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. நீங்கள் நண்பர்களுக்கு உதவுவதால் ஒற்றுமை மேம்படும்.

**கன்னி**

வாகன வகையில் ஆதாயம் உண்டாகும். கலகலப்பான நாள். மேலதிகாரிகளிடம் நல்ல பெயரை பெற்றுக்கொள்வீர்கள். வீட்டில் எதிர்கால நன்மை கருதி முக்கிய முடிவு எடுப்பீர்கள்.

**துலாம்**

புதிய பொழுதுபோக்கு அம்சங்களில் ஆர்வம் வரும். மாணவர்களுக்குக் கல்வியில் கூடுதல் கவனம் தேவைப்படும். வாழ்க்கைத்துணையின் முயற்சியால் குடும்ப நிலை உயரும்.

**விருட்சிகம்**

வீட்டில் சுபச்செலவுகள் ஏற்படும். வாகன சேர்க்கை உண்டு. தங்கம், வெள்ளி பொருட்கள் வாங்குவீர்கள். மனம் மகிழும். வியாபாரிகளுக்குப் புதிய மேம்பாடு திருப்தி தரும்.

**தனுசு**

சக பணியாளர்களிடம் விட்டுக்கொடுத்து செல்ல வேண்டிய நாள். குழந்தைகளுக்காக அதிக செலவுகள் செய்ய வேண்டியிருக்கும். பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும். சோம்பலை உதறுங்கள்.

**மகரம்**

பணிமாற்றம் பற்றி ஆலோசனை எடுத்துக் கொள்ளுங்கள். முயற்சி முன்னேற்றம் தரும். நிதானமான நாள். பழக்கமற்ற புதிய தொழிலில் ஈடுபட வேண்டாம்.

**கும்பம்**

உங்களை மேலதிகாரி பாராட்டும் நாள். நிதி நிலை சீராகும். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தரும். உடன்பிறந்தோரால் ஆதாயம் ஏற்படும். நட்பு வட்டம் விரியும்.

**மீனம்**

கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருப்பீர்கள். மற்றவர்களுடன் பழகும் போது கவனம் தேவை. சொத்துக்கள் மூலம் வருமானம் வரும். நின்று போன பணி தொடரும்.

# இரு தமிழர்களை எம்.பியாக்க பிரதமர் நரேந்திர மோடி திட்டம்?

*சென்னை, ஏப். 18*

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இரு தமிழர்களை பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவை ஆளும் மத்திய அரசான பாரதிய ஜனதா கட்சிக்கு தமிழக சட்ட சபையில் நான்கு உறுப்பினர்களே உள்ளனர். இந்நிலையிலேயே இரு தமிழர்களை ராஜ்ய சபை உறுப்பினர்களாக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

ராஜ்ய சபை தேர்தலில் ஒருவர் வெற்றி பெறுவதற்கு 35 சட்ட சபை உறுப்பினர்களின் வாக்குக் தேவை. ஆனால், ஜனாதிபதி 12 பேரை ராஜ்ய சபை உறுப்பினர்களாக நிய மிக்க முடியும். விளையாட்டு, சமூக சேவை என பல துறை களில் சிறந்து விளங்குபவர்களை இவ்வாறு எம்.பிக்களாக நியமிக்க முடியும்.



இந்த வழியைப் பின்பற்றி இரண்டு தமிழர்களை எம்.பி. ஆக்க மோடி திட்டமிட்டுள்ளார். யார் அந்த இருவர் என்று பரபரப்பாக பேசப்பட்டாலும், அவர்கள் யார் என்ற விவரத்தை இது வரை வெளியாகவில்லை. (ஐ)

# ஹிந்தி எதிர்ப்பு விடயத்தில் தமிழக அரசு இரட்டைவேடம்!

## அ. தி. மு. க. கட்சி கண்டனம்

*சென்னை, ஏப். 18*

ஒரு பக்கம் ஹிந்தித் திணிப்பு என்று கூறி தமிழுக்கு போராடுவது போல் நடிப்பது, மறுபக்கம் ஹிந்தியில் திராவிட முன்னேற்ற கழக (தி. மு. க.) தலைவரை விளம்பரப்படுத்துவது என்று அந்தக் கட்சி இரட்டைவேடம் போடுகிறது என்று அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ. தி. மு. க.) ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

"முதல்வரை பிரபலப்படுத்துவதற்காக ஹிந்தி மொழியை தி. மு. க. அரசு பயன்படுத்தி வருவதாக செய்திகள் வந்துள்ளன. பாராளுமன்ற ஆட்சி மொழிக் குழுத் தலைவர் என்ற முறையில் ஆட்சி மொழிக்கூட்டத்தில், "ஆங்கிலத்துக்கு பதிலாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்துங்கள்" என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

இதற்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்தன. தமிழ்நாடு முதல்வர் "இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு வேட்டு வைக்கும் செயல் என வீரவேசத்துடன் விமர்சித்தார். தமிழ் மொழியை வளர்க்க வேண்டிய முதல்வர் அதைச் செய்யாமல், தன்னை வளர்த்துக் கொள்ளும் பணியில், தன்னைப் பிரபலப்படுத்திக் கொள்ளும் பணியில் ஹிந்தி மொழியை வளர்த்து வருகிறார்.

முதல்வர் மு.க. ஸ்ராலினை தேசிய தலைவராகப் பிரபலப்படுத்த வேண்டும் என்பதற்காகவும் குறிப்பாக வட மாநிலங்களில் அவர் புகழ் பரவ வேண்டும் என்பதற்காகவும், சில நடவடிக்கைகள் தி. மு. கவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு பக்கம் இந்தித் திணிப்பு என்று கூறி தமிழுக்குப் போராடுவது போல் நடிப்பது, மறுபக்கம் ஹிந்தியில் திமுக தலைவரை விளம்பரப்படுத்துவது என இரட்டை வேடம் போடுகிறது தி. மு. க. அரசு - என்று கூறியுள்ளார். (ஐ)

# காதலனை மணப்பதற்காக கொலைகாரியான மாணவி!

*கோவை, ஏப். 18*

காதலனை திருமணம் செய்தவற்காக மூதாட்டி ஒருவரை கொன்று அவரின் நகைகளை அபகரித்த 17 வயதே ஆன மாணவியை தமிழக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோவை - பொள்ளாச்சியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒன்றரை வருடங்களாக காதலித்து வரும் நபரை திருமணம் செய்வதற்காகவே மூதாட்டியை கொன்று நகைகளை அபகரித்ததாக அந்த மாணவி பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

அயல் வீட்டில் வசித்து வந்த மூதாட்டியிடம் நிறைய நகைகள் இருந்ததால் அவரின் நகைகளை அபகரிக்க ஆசைப்பட்டதாகவும், இந்நிலையிலேயே அவரைக் கொலை செய்ய நேர்ந்ததாகவும் காதலனுடன் சேர்ந்து வாழ ஆசைப்பட்டு இரு மாதங்களாக திட்டமிட்டு இந்தக் கொலையை செய்ததாக மாணவி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். (ஐ)



உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவான நேற்று முன்தினம் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் விழா இலட்சக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.



## உயிர்த்த ஞாயிறு தினத்தில் 75 குடும்பங்களுக்கு உலருணவு

யாழ்ப்பாணம், ஏப். 18

கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழாவை முன்னிட்டு கனடா ரொறன்ரோ நேயம் பௌண்டேஷனால் உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

புனித பெரியன்னை பேராலய பங்கை சேர்ந்த 75 குடும்பங்களுக்கு 2000 ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொதிகள் உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன.

சனசமூக நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க

கனடா நேயம் பௌண்டேஷன் நிறுவனம் இந்த உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்தது. (ஐ - 3)



## ஈஸ்டர் தின வழிபாடுகள் கிளிநொச்சியில் நடந்தன!

கிளிநொச்சி, ஏப். 18

உயிர்த்த ஞாயிறு தின வழிபாடுகள் நேற்று கிளிநொச்சியில் சிறப்பாக இடம்பெற்றன.

அனைத்து திருச்சபைகளிலும் விசேட திருப்பலி வழிபாடுகள் இடம்பெற்றன.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் பிரச்னைகள் நீங்கி உயிர்த்த இயேசு பிரான் நாட்டை ஆசீர்வதிக்க வேண்டும் என வழிபாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.முறிகண்டி தென்னிந்திய திருச்சபையின் வழிபாடு நேற்று காலை இடம் பெற்றது. திருப் பலியை வண. பிதா ஜோன் தேவசகாயம் ஒப்புக் கொடுத் தார். (ஐ)

# நல்லூரில் கிறிஸ்தவ சுவரொட்டி; சிவசேன அமைப்பு கடும்சீற்றம்!

யாழ்ப்பாணம், ஏப். 18

**பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய சூழலில் நேற்று முன்தினம் இரவோடு இரவாக மதமாற்ற கிறிஸ்தவ சபை மன நோயாளிகளால் இயேசு பிரசார சுவரொட்டிகள் ஆலய புனிதத் தன்மைக்கு குந்தகம் விளைவிக்கும் விதமாக வேண்டுமென்றே ஒட்டப்பட்டுள்ளன என்று சிவசேனை அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.**

தமக்கு இந்து உணர்வாளரிடம் இருந்து இவ்வாறு 'நல்லூரரை சுற்றி போஸ்ரர்கள் ஒட்டப்படுகின்றன என்ற தகவல் கிடைத்தது. இதையடுத்து எமது அமைப்பை சார்ந்த இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஒன்று கூடி ஒட்டியவர்களைத் தேடினோம். எனினும் ஒட்டியவர்கள் எம் கைகளில் சிக்கவில்லை. ஒரு படி ரக வாகனத்தில் வந்த 4 ஆண்களும் ஒரு பெண்ணுமே இந்த கீழ்த்தர இழிவான செயலில் ஈடுபட்டனர் என்று எமக்கு தகவல் தந்த உணர்வாளர் கூறியிருந்தார்.

இவர்கள் நல்லூர் கோவிலை சுற்றியுள்ள சிறிய ஆலயங்களின் சுவர்களிலும் தங்கள் இழி குணத்தைக் காட்டியுள்ளனர். சித்திரா பௌர்ணமி நன்நாளில் இந்துக்கள் பெருமளவில் ஆலயத்திற்கு செல்லும்போது இந்த விஷம பிரசார சுவரொட்டிகளை பார்த்துக்கொண்டு செல்ல வேண்டும் என்ற கீழ்த்தர நோக்கிலேயே இந்த சுவரொட்டிகள் இந்த தீய மதமாற்ற கிறிஸ்தவ சபையினரால் நல்லூரை சுற்றி ஒட்டப்பட்டுள்ளன.




நல்லூரரை சுற்றி ஒட்டப்பட்ட அனைத்து சுவரொட்டிகளும் உருத்திர சேனையால் கிழித்து அதே இடத்தில் தீக்கிரையாக்கப்பட்டன. இவ்வாறான கீழ்த்தர செயல்கள் செய்பவர்கள் எம் கைகளில் சிக்கும்போது அவர்கள் செய்த பிழையின் ஆழம் உணர வைக்கப்படும் - என்று அந்த அமைப்பு கூறியுள்ளது. (ஐ-3)

## வடக்கு பிரதி பொலிஸ்மா அதிபருக்கு இடமாற்றம்!

யாழ்ப்பாணம், ஏப். 218

வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பளிகக்காரவுக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வெற்றிடத்துக்கு மூத்த பிரதிப் பொலிஸ் மா ஜெயந்த வீரசூரிய நியமிக்கப் பட்டுள்ளார்.

இதனடிப்படையில் வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பளிகக்கார சமூக பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பாக செல்ல, அவரின் இடத்தை மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த வீரசூரிய நிரப்புவார். (ஐ-3)



## உயிர்த்த ஞாயிறு பெருவிழா யாழில் சிறப்பாக நடைபெற்றது

யாழ்ப்பாணம், ஏப். 18

உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் அனைத்து தேவாலயங்களிலும் நேற்று விசேட ஆராதனைகளுடன் கூட்டுத் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது.

உயிர்ப்பு பெருவிழாவின் பிரதான நிகழ்வுகள் யாழ்ப்பாண நகர மரியன்னை பேராலயத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதனை யாழ். மறைமாவட்ட ஆயரின் அருட்சகோதர் என் டீபன் ராஜ் அவர்கள் நடத்தி வைத்தார்.

தவக்காலத்தின் மறுமலர்ச்சியில் உயிர்த்த ஞாயிறு அன்று "இயேசுப்பிரான் காட்டிய வாழ்வியல் பாடங்கள்" என்னும் தலைப்பிலான சிறப்பு கூட்டுப்போதனையும் இடம் பெற்றது. இதில் யாழ். மாவட்டத்தில் இருந்து பல பாகங்களிலும் வருகைதந்த கிறிஸ்தவ மக்கள் கலந்துகொண்டனர்.

இதேபோன்று, யாழ். மாவட்டத்தின் சகல தேவாலயங்களிலும் நேற்று விசேட ஆராதனைகளும் வழிபாடுகளும் திருப்பலி ஒப்புக் கொடுப்புகளும் நடைபெற்றன.

(ஐ-3)

# எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு; கிளிநொச்சி மக்கள் மகிழ்ச்சி!

### பொலிஸாரின் நடவடிக்கைக்கு பாராட்டு

கிளிநொச்சி, ஏப். 18

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தமக்கு தேவையான எரிபொருளை பெறக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

ஒரு மாதகாலமாக நிலவி வந்த எரிபொருளுக்கான நீண்ட வரிசை தற்போது குறைவடைந்துள்ளது.



அளவுக்கு அதிகமாக எரிபொருளை வைத்திருப்பவர்களை பொலிஸார் கைது செய்யும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்ற நிலையில், தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தேவையான எரிபொருளை பெறக்கூடிய நிலை உருவாகியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன், கொள்கலனுக்கு எரிபொருள் வழங்கப் படாமையாலும், இலகுவில் எரிபொருள் பெறக் கூடிய நிலை ஏற்பட்டுள்ள தாக விவசாயிகள் மற்றும் வாகன சாரதிகள் தெரிவித்தனர். (ஐ)



# காட்டு யானைகளால் பயன்தரு மரங்கள் அழிவு!

கிளிநொச்சி, ஏப். 18

கிளிநொச்சி - கண்டாவளை - மயில்வாகனபுரம் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த மூன்று காட்டு யானைகள் பயன்தரு மரங்களை அழித்துச் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

15இற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், 50இற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் என்பன இவ்வாறு அழிக்கப்பட்டன என்று அந்தக் கிராம மக்களால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த மர வள்ளிகளையும் அழித்து யானைகள் துவம்சம் செய் துள்ளன.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# காலிமுகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் செவ்வாயன்று பணி புறக்கணிப்பு

கொழும்பு, ஏப். 18

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி காலி முகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு ஆதரவாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளது.**

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தப்படவுள்ளது.

அத்துடன், நாளை செவ்வாய்க்கிழமை கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகி காலி முகத்திடலை சென்றடையும் எதிர்ப்பு பேரணி ஒன்றையும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஷ்யாமா பன்னெஹேக கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் போது பொதுத் தேவைகள் குறித்து நாங்கள் உணர்திறன் உடையவர்கள். பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்ப்பதாக தெரியவில்லை.

அத்துடன், அரச பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகள் முழுத் திறனுடன் கூடிய விரைவில் தொடங்க வேண்டும் என்றும் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

செவ்வாய்கிழமையன்று நடைபெறும் ஆர்ப்பாட்ட பேரணியில் அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் பணியாளர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக பேராசிரியர் பன்னெஹேக குறிப்பிட்டார். (ஐ)



# ஸ்திரமான அரசியலே தேவை; புதிய அரசமைப்பு அவசியமல்ல!

## நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஏப். 18

நாட்டின் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு முன்னதாக வலுவான பொருளாதாரம், ஸ்திரமான அரசியலை உருவாக்குவதே பிரதான தேவை. பிரதமர் பதவிக்கு நான் நியமிக்கப்படவுள்ளேன் என்று வெளியான தகவல்கள் இட்டுக்கட்டப்பட்ட பொய்கள். அமைச்சுப் பதவியை எதிர்பார்க்கவில்லை.

- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் அம்பாந் தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமகால நிலைமை குறித்து கருத்து வெளியிட்டபோது மேற்கண்டவாறு கூறிய அவர், "நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பதை ஏற்றுக்கொள்கின்றேன். பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. எரிபொருட்களை இலகுவாக பெற்றுக்கொள் வதில் அசௌகரியமான நிலைமைகள் உள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு காண வேண்டியுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கை சுமுகமாகப்பட வேண்டியது மிகவும் அவசியமானது. இந்த விடயத்திற்கே முதலிடம் வழங்கப்பட வேண்டும் என்பது எனது நிலைப்பாடாகும்.

பொருளாதார நெருக்கடியை அடுத்து அரசியல் ஸ்திரமற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமைகளும் சீர் செய்யப்பட வேண்டும். மக்கள் பிரச்னைகளுக்கு தீர்வுகளை வழங்கும் அமைச்சரவை அமைக்கப்பட வேண்டும். இதனை ஜனாதிபதி விரைந்து முன்னெடுக்கவுள்ளார்.

தற்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும், 20ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட்டு 19ஆவது திருத்தச் சட்டம் மீண்டும் அமுலாக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் அரசியல் கட்சிகளிடத்திலிருந்து தோற்றம் பெற்றிருக்கின்றன.

முதலில் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வுகாணப்படாமலும், ஸ்திரமான அரசியல் நிலைமையொன்று ஏற்படாமலும் அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கள் பற்றி பேசுவதால் பயனில்லை. எதிர்க்கட்சிகளின் அரசியலமைப்பு மறுசீரமைப்பு கோரிக்கைகள் அக்கட்சிகளின் சுயஇலாப நோக்கமுடையவை. அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ஐ)

# நாளை முதல் மாணவர் சேர்ப்பு

கொழும்பு, ஏப். 18

2022 கல்வி ஆண்டுக்கான முதலாம் தரத்துக்கு மாணவர்களை அரச பாடசாலைகளில் அனுமதிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது.

இதன்படி, நாளை செவ்வாய்க்கிழமை முதல் முதலாம் தரத்துக்கான மாணவர்கள் சேர்ப்பு இடம்பெறுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# இறைச்சிக்காக மாடு அறுத்த இருவர் சுழிபுரத்தில் கைது!

வட்டுக்கோட்டை, ஏப். 18

சுழிபுரத்தில் பற்றைக் காணியில் வைத்து திருட்டு மாடுகள் இரண்டை சட்டவிரோதமாக இறைச்சிக்காக வெட்டிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவின் புலனாய்வாளர்களால் இவர்கள் இருவரும் நேற்று கைது செய்யப்பட்டனர்.

அதே இடத்தைச் சேர்ந்த 36 மற்றும் 40 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடமிருந்து 40 கிலோ மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ- 3)



# மன்னாரில் சிறப்புற நடந்தது உயிர்த்த ஞாயிறு பெருவிழா

மன்னார், ஏப். 18

இயேசுவின் உயிர்ப்பு பெருவிழாவான நேற்று மன்னார் மறை மாவட்டத்தின் தேவாலயங்களில் நேற்றுக் காலை இடம்பெற்றன. மன்னார் செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு 11.15 மணிக்கு நள்ளிரவு ஆராதனை ஆரம்பமானது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதன் போது மக்கள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக கலந்து கொண்டனர்.

திருவிழா திருப்பலி இடம்பெற்ற போது ஆலயத்தை சூழ பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. இதேபோன்று நேற்று சகல தேவாலயங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்பட்டிருந்தன. (ஐ)

# வயோதிபர்கள்மீது வாள்வெட்டு; நகையும் பணமும் கொள்ளை!

## புதுக்குடியிருப்பில் சம்பவம்

முல்லைத்தீவு, ஏப். 18

வீட்டில் தனித்திருந்த வயோதிப தம்பதியர் மீது வாள் வெட்டு நடத்திவிட்டு அவர்களிடமிருந்து நகையும் பணமும் கொள்ளையடிக் கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - தேவிபுரம் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

தேவிபுரம் மஞ்சள் பாலத்துக்கு அருகில் வீடொன்றில் வயோதிப தம்பதியர் தனியாக வசித்து வந்தனர். இவர்களின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் மூதாட்டியின்மீது சரமாரியான தாக்குதல் நடத்தியதுடன், முதியவரையும் வாளால் வெட்டி காயப்படுத்தினர்.

இதன் பின்னர், மூதாட்டி மஞ்சள் கயிற்றில் அணிந்திருந்த தாலியை பறித்தவர்கள், அங்கிருந்து பணத்தையும் கொள்ளையிட்டு தப்பிச் சென்றனர்.

கிராம அமைப்புகளின் உதவியுடன் வயோதிபர்கள் இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# குளத்தில் பாய்ந்தது மோ. சைக்கிள் இரு மாணவர்கள் பலி; இருவர் காயம்!

கொழும்பு, ஏப். 18

தம்புள்ளை - வேமதில்லையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இரண்டு மாணவர்கள் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

4 பேர் பயணித்த மோட்டார் சைக்கிள் குளத்தில் பாய்ந்ததில் இந்த விபத்து சம்பவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் கலேவெல, புவக்பிட்டிய, நட ஹஹாவத்த பகுதியைச் சேர்ந்த பிசுல் ஹபீக் ஹம்னிதாஸ் (வயது 16) மற்றும் நவ்சாத் அலி முசாபிக் (வயது 16) என அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றைய இருவர் படுகாயமடைந்த நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உகண்டா முதலீட்டை திரும்பப் பெறுங்கள்!

## அநுரகுமார எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஏப். 18

உகண்டாவில் முதலீடு செய்யப்பட்டவை மீளப் பெறப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பேருவளையில் நேற்று ஆரம்பமான மக்கள் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையையடுத்து இவ்வாறான மக்கள் போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். நாட்டை சீரழிக்கும் அரசாங்கத்தைவிட நாட்டை கட்டியெழுப்பும் அரசாங்கமொன்று அவசியம்.

இந்தக் கருத்தை பலமாக முன்வைப்பதற்காகவே மக்கள் இன்று வீதிக்கு இறங்கியுள்ளனர். இதற்காகவே இந்த ஆர்ப்பாட்ட பேரணியை நாம் இன்று ஏற்பாடு செய்துள்ளோம். உகண்டா நாட்டில் சொத்துக்கள் வாங்கப்பட்டமை தொடர்பிலும் முதலீடுகள் செய்யப்பட்டமை தொடர்பிலும் கருத்துக்கள் பரவி வருகின்றன.

இதேபோன்று, டுபாயில் வங்கிக் கணக்குள் தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. மல்வானை, மாத்தறை, அமெரிக்க லொஸ் ஏஞ்சல்ஸ் நகர், சீசெல்ஸ் தொடர்பிலும் கருத்துக்கள் பரவி வருகின்றன. நாடு படுகுழிக்குள் தள்ளப்பட்டிருந்தாலும் நாட்டின் ஆட்சியாளர்கள் படுகுழிக்குள் விழவில்லை. அவர்களது வங்கிக் கணக்குகள் கோடிகளால் நிரம்பி வழிகின்றன. இதனை நாட்டு மக்கள் நன்கு உணர்வர்.

இந்த அரசாங்கம் திருடியதை பாதுகாப்பதற்கான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக மற்றைய குழுவினர் முயற்சி செய்கின்றனர். எனவே, உகண்டா, சீசெல்ஸ், லொஸ் ஏஞ்சல்ஸ் என அனைத்து பிரதேசங்களிலும் மக்களின் பணத்தை கொள்ளையடித்து சேகரிக்கப்பட்டவற்றை மீளப்பெற வேண்டும். இதனை யார் செய்ய முடியும்?

எமது நாட்டில் மோசடிகளுடன் தொடர்புபடாத தரப்பினரினாலேயே இதனை செய்ய முடியும். எனவே, ஊழல் மோசடியில் ஈடுபடாத ஒரு தரப்பினரிடம் நாடு கையளிக்கப்பட வேண்டும் - என்றார். (கே)

# காலியில் கோட்டா கோ கம போராட்ட பந்தல் அகற்றம்!

- பதற்றத்துக்கு மத்தியிலும் தொடர்கிறது போராட்டம் -

காலி,ஏப்.18

**காலி பேருந்து நிலையத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த "கோட்டா கோ கம" போராட்டக்களத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பொலிஸாரால் பலவந்தமாக அகற்றப்பட்டது.**







கொழும்பு - காலிமுகத்திடலில் போராட்டம் இடம்பெறும் "கோட்டா கோ கம" காலி கிளை என குறிப்பிடப்பட்ட இந்தப் பகுதியில் போராட்டக்காரர்கள் அமைத்திருந்த கூடாரத்தில் மக்கள் வழங்கிய தண்ணீர் போத்தல்கள், சிற்றுண்டிகள் உள்ளிட்ட பொருட்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் குறித்த கூடாரம் பொது மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறது என்று கூறி அதனை அகற்ற முனைந்தனர். இதனால், பொலிஸாருக்கும் - போராட்டக்காரர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

எனினும், பொலிஸார் கூடாரத்தை வலுக்கட்டாயமாக அகற்றினர். ஆனால், அங்கிருந்து அகல மறுத்த போராட்டக்காரர்கள் அந்த இடத்திலிருந்தவாறு தொடர்ந்து போராடி வருகின்றனர். ஜனாதிபதி பதவி விலகும்வரை இந்தப் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# மக்கள் எழுச்சி போராட்டங்களை முடக்குவதற்கு முயல வேண்டாம்!

## மரிக்கார் எம். பி. எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 18

மக்கள் எழுச்சிப் போராட்டங்களை முடக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமாயின், அதற்கு எதிராக எவ்வித நிபந்தனைகளுமின்றி எதிர்க்கட்சி துணை நிற்கும் என்று, அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், மக்கள் எழுச்சி போராட்டங்களை முடக்க முடியாது என்பதை அரசாங்கத்துக்கு தெரியப்படுத்த விரும்புகின்றேன். போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுத்தால் மட்டுமே, மக்கள் எழுச்சிப் போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

இந்த அரசாங்கமே, மக்களை இவ்வாறானதொரு நிலைமைக்கு கொண்டுவந்தது. மக்களை வரிசைகளில் நிறுத்தி, இருளுக்குள் தள்ளி, பொருட்களின் விலைகளை அதிகரித்து, மக்களின் பணத்தை சூறையாடி, அரச சொத்துக்களை சூறையாடிதன் காரணமாக அரசாங்கத்துக்கு எதிரான ஒரு போராட்டத்தை மக்கள் இன்று ஆரம்பித்துள்ளனர்.

எனவே இந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமெனில் முதலில் மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். முதலாவதாக அரசாங்கமானது மக்கள் வாழ்வதற்கான ஒரு சூழலை நாட்டில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இரண்டாவதாக ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும்.

அமைச்சர்களுக்கான சிறப்புரிமைகள் குறைக்கப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும், 20ஆவது திருத்தம் நீக்கப் பட வேண்டும், நாட்டின் நெருக்கடிகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமாயின் மக்கள், போராட்டங்களை முன்னெடுக்கப் போவதில்லை. அதேபோன்று நாட்டுமக்களின் பணத்தை கொள்ளையடித்த, அரச சொத்துக்களை சூறையாடிய அனைவருக்கும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதுடன் கொள்ளையடிக்கப்பட்ட அரச சொத்துக்கள் மீண்டும் நாட்டுக்கு கையளிக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

அறைக்குள் இருந்துக்கொண்டு அமைச்சரவையை உருவாக்கி புதிய அரசாங்கத்தை அமைத்து இந்த போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. நாட்டு மக்கள், "கோட்டா கோ ஹோமா" என்றே கூறுகின்றார்கள். "ராஜபக்ஷ கோ ஹோம்" என்று கூறுகின்றார்கள். "இந்த அரசாங்கம் வீட்டுக்கு செல்ல வேண்டும்" என்று கூறுகின்றார்கள். அவ்வாறு ஒரு தீர்மானத்துக்கு மக்கள் வந்தமைக்கான காரணத்தை கண்டறிந்து அதற்கான தீர்வை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

அதனைவிடுத்து மக்கள் போராட்டங்களை முடக்குவதற்கான முயற்சிகளை அரசு முன்னெடுக்குமாயின் அதற்கு எதிராக எவ்வித நிபந்தனைகளுமின்றி எதிர்க் கட்சி முன்னிற்கும் என்பது உறுதி - என்றார். (கே)



# பேருவளை - கொழும்பு மக்கள் பேரணி ஆரம்பம்!

## நாளை கொழும்பை வந்தடையும்

கொழும்பு, ஏப். 18

"மக்களை துன்பத்துக்குள் தள்ளிய அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம்" என்ற தொனிப் பொருளில் மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்ட பேரணியானது, நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் களுத்துறை - பேருவளை நகரில் ஆரம்பமானது.

பேருவளையில் ஆரம்பமான இந்த பேரணி வாதுவை நகரை அடையும். இங்கிருந்து இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கும் பேரணி மொறட்டுவையை சென்றடையும், அங்கிருந்து நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் பேரணி கொழும்பு நகர மண்டபப் பகுதியை வந்தடையும்.

பெருமளவான மக்கள் பங்கேற்ற இந்தப் பேரணியில், "மக்களின் பணம் சூறையாடப்பட்டுள்ளது", "சமைப்பதற்கு எரிவாயு இல்லை", "வீட்டில் மின்சாரம் இல்லை" போன்ற கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பினர். அத்துடன், அரசாங்கத்துக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும் சென்றனர். (கே)




# உகாண்டா கரன்சியுடன் இலங்கையில் இருந்து சென்ற விமானங்கள் பின்னணி என்ன?

> **இலங்கையில் ஆளும் ராஜபக்‌ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான 3 சரக்கு விமானங்களின் மூலம் 102 டன் கரன்சி கள் உகண்டாவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ள தாக தகவல் பரவி வருகிறது. இந்த விவகாரத்தில், கொழும்பு கட்டுநாயக்க சர்வ தேச விமான நிலையத்திலிருந்து, உகண்டாவின் என் டெபே சர்வதேச விமான நிலையத்திற்கு பணத்து டன் கூடிய சரக்குக் கலன்கள் கொண்டு செல்லப்பட்ட தாக ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.**

இலங்கையில் இருந்து பெரும் தொகை மதிப்புள்ள நோட்டுகள் உகண்டா நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட விவகாரத்தில் வெளிவரும் இரு வித தகவல்களால் நாட்டில் சர்ச்சை நிலவி வருகிறது. அங்கு ஆளும் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள், சமூக ஊடக பக்கங்களில் இது பற்றிய தங்களுடைய சந்தேகங்களை பகிர்ந்து வருகின்றனர்.

இலங்கையில் ஆளும் ராஜபக்‌ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான 3 சரக்கு விமானங்களின் மூலம் 102 டன் கரன்சிகள் உகண்டாவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல் பரவி வருகிறது.

இந்த விவகாரத்தில், கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து, உகண்டாவின் என்டெபே சர்வதேச விமான நிலையத்திற்கு பணத்துடன் கூடிய சரக்குக் கலன்கள் கொண்டு செல்லப்பட்டதாக ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

அது முழுமையான வர்த்தக நடவடிக்கைகளுககாக பயன்படுத்தப்பட்ட சேவைகள் எனவும், கொரோனா பெருந்தொற்று காலத்தில் பிரிட்டனைச் சேர்ந்த சரக்கு கையாளும் நிறுவனத்துக்காக தங்களுடைய விமானங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருந்த காலகட்டத்தில் உகாண்டாவுக்காக அச்சடிக்கப்பட்ட அந்நாட்டின் கரன்சிகள் இடம்பெற்ற நோட்டுகள் அடங்கிய கலன்கள் பயணிகள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாக ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் கூறியுள்ளது.

உலகளாவிய ரீதியில் நாணயத்தாள்களை அச்சிடும் நிறுவனமொன்றிடமிருந்து இந்த நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாக அந்த நிறுவனம் தமது ட்விட்டர் பக்கத்தில் விளக்கம் அளித்துள்ளது.

இந்த விவகாரத்தில் பிரிட்டனைச் சேர்ந்த நாணயம் அச்சிடும் நிறுவனமான டே லா ரூ (DE LA RUE), அதன் ட்விட்டர் பக்கத்தில் De La Rue உலகெங்கிலும் உள்ள நாடுகளின் மத்திய வங்கிகளில் பாதிக்கு மேலானவற்றுக்கு அவற்றின் நோட்டுகளை வழங்குகிறது. இலங்கை, கென்யா, மால்டா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் உள்ள எங்கள் தளங்களில் இருந்து, சம்பந்தப்பட்ட நாடுகளின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வகையில் இலங்கை மற்றும் கென்யாவில் உள்ள கூட்டு நிறுவனங்கள் மூலம் நாங்கள் இதைச் செய்கிறோம். வாடிக்கையாளர்களைப் பற்றி நாங்கள் கருத்து தெரிவிப்பதில்லை என்று கூறியுள்ளது.

## சந்தேகம் எழுப்பும் அரசியல்வாதிகள்

இருப்பினும், இந்த இரு நிறுவனங்களின் விளக்கத்தால் சில அரசியல் கட்சிகள் சமாதானம் அடையவில்லை.

உகண்டாவிற்கு தேவையான பணத்தை அச்சிட இலங்கைக்கா வர வேண்டும் என முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ கேள்வி எழுப்பியுள்ளார். உகண்டாவுடன் இந்த கொடுக்கல் வாங்கல் மாத்திரமல்ல, மேலும் பல கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

நாட்டில் தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், இலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் சிலர், தமது சொத்துக்களை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்கிறார்களோ என்ற தெளிவான சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி ராஜித்த சேனாரத்ன, உகண்டாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஜெட் விமானத்தின் ஊடாகவே, பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ இந்தியாவின் ஆலயங்களுக்கு சென்றதாக குறிப்பிட்டார். தென் இந்தியாவிற்கு இலங்கையிலிருந்து ஒன்றரை மணி நேரத்தில் செல்ல முடியும் எனக் கூறிய அவர், அதற்காக 20 மணி நேரம் செலவிட்டு உகண்டாவிலிருந்து ஜெட் விமானத்தை வரவழைத்தது தொடர்பாகவும் சந்தேகம் எழுப்புகிறார்.

SriLankan Airlines
@flysrilankan

Cargo flights to Uganda in February 2021(4/5) - the Ugandan government ordered Ugandan currency notes from a global security printer who operates several factories worldwide, including one in Sri Lanka, exporting to global markets.

6:22 PM · Apr 14, 2022

உகண்டாவிற்கு பணம் அச்சிடப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாக தற்போது கூறப்படும் நிலையில், இதற்கு முன்னர் உகண்டாவிற்கு யார் பணம் அச்சிட்டார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். மூன்று விமானங்கள் நிரம்பும் வகையில் அச்சடிக்கப்பட்ட நோட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## திடீர் சர்ச்சை ஏன்?

2020-2021 ஆண்டில் ஆளும் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ ஆட்சியின் போது இலங்கை நாணய அச்சடிக்கும் உள்ளூர் அச்சகத்தின் விவரங்கள் பற்றிய தகவல்கள் சில ஊடகங்களில் வெளியாயின. பிரதமரின் இல்லமான "அலரி மாளிகை" பகுதியில் இருந்து லாரிகள் நிறைய பணத்தை ஏற்றிச் சென்றதாக அந்த செய்திகளில் கூறப்பட்டிருந்தன.

இலங்கை ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் வேளையில் திடீரென அதிபர் கோட்டாபயவுக்கும் மஹிந்தவுக்கும் எதிரான மக்கள் போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றன. இந்த போராட்டத்தை பலவீனப்படுத்த அவசரநிலை மற்றும் மேலதிக கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டன. ஆனாலும், பொதுமக்கள் இந்த தடைகளை பொருட்படுத்தாமல் வீதிகளில் இறங்கி போராடினார்கள்.

De La Rue
@DeLaRuePlc

De La Rue provides banknotes for half of the central banks around the world. We do this from our sites in Sri Lanka, Kenya, Malta and the UK, with joint ventures in Sri Lanka and Kenya that contribute to the economies of those countries. We do not comment on our customers.

10:53 AM · Apr 15, 2022

310 Reply Share

உகாண்டா நாடு ஏற்கெனவே தனது மோசமான நிதி நிலைமை காரணமாக, சர்வதேச நிதி அமைப்புகளால் "கிரே லிஸ்ட்" பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது, இது நாடுகளின் நிதி அமைப்புகளின் பாதுகாப்பு அல்லது அபாயத்தின் அளவைக் காட்டும் ஒரு பட்டியலாகும்.

இந்த நிலையில், "தடுப்புப் பட்டியலில்" தரமிறக்கப்படுவதைத் தவிர்க்க, உகாண்டா மே 2022க்குள் திருத்தப்பட்ட நிதி அறிக்கையை சர்வதேச அமைப்புகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த நிலையில், 1986 முதல் 2021 வரை உகாண்டாவின் வெளிநாட்டு கையிருப்பு சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. இருப்பினும் 2021 இல் அந்த எண்ணிக்கை 4.4 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்துள்ளது என்றும் சமங்கிலி வனிதா பலவேகயவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர கூறினார்.

இத்தகைய சூழலில் நிதி மற்றும் பணப் பாதுகாப்பு தொடர்பான பல பிரச்னைகளைக் கொண்ட ஆப்ரிக்க நாடான உகாண்டாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நடந்த பரிவர்த்தனைகள் தொடர்பான தகவல், இலங்கையர்கள் மத்தியில் கவலைகளை அதிகரித்துள்ளது.

[பிபிசி]

# எப்படிப் போராடுவது என்பதைவிட எதற்காகப் போராடுவது என்பதே...



பனங்காட்டான்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் கொழும்பின் மையப்பகுதியில் அமைந்துள்ள காலிமுகத் திடல் மிகவும் பிரசித்தமானது. நாட்டின் முதலாவது பிரதமரான டி.எஸ். சேனநாயக்க 1952ம் ஆண்டு மார்ச் மாதம் 22ம் திகதி இந்த இடத்தில்தான் தமது குதிரையிலிருந்து வீழ்ந்து அகால மரணத்தைத் தழுவினார்.

பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டார நாயக்க 1956ம் ஆண்டு யூன் மாதம் 5ம் திகதி தனிச்சிங்கள சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய வேளை, தமிழ்த் தலைவர்கள் இதே காலிமுகத் திடலில்தான் அமைதிப் போராட்டம் நடத்தி சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டனர். இதுவே ஈழத்தமிழர்களால் நடத்தப்பட்ட முதலாவது சத்தியாக்கிரகம்.

இஸ்லாமியர்கள் வருடா வருடம் இங்கு தான் ஆயிரக்கணக்கில் கூடி புனித ரம்ழான் தொழு கையை நடத்துவர். ஆட்சி நடத்தும் அரசியல் கட்சிகள் தங்களின் மே தின விழாவுக்கான இடமா கவும் இதனையே பயன்படுத்துவது வழக்கம்.

இலங்கைக்கு பெருமளவு அந்நியச் செலாவணி பெற்றுக் கொடுக்கும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் தினமும் இந்தக் காலிமுகத் திடலில் கூட்டம் கூட்டமாக கூடிக் களிப்பர். அதனைக் கண்டுகளிக்க இன்னும் பல கூட்டங்கள் அங்கிருக்கும்.

யாழ்ப்பாணப் பனங்கிழங்கு, கறுத்தக்கொழும்பு மாம்பழம், வகைவகையான சுண்டல் கடலைகள் - வடைகள், ஐஸ்கிறீம் வண்டிகள் என்று வியாபாரம் இங்கு எப்போதுமே களைகட்டி இடம்பெறும்.

கடந்த சில நாட்களாக இன்னொரு வகையில் காலிமுகத்திடல் சர்வதேசத்தின் பார்வைக்குட்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகி வீட்டுக்குச் செல்ல வேண்டும், ராஜபக்ச குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனச் சபதம் எடுத்துள்ள ஆயிரமாயிரம் மக்கள் அரசியல் இன மத வர்க்க வேறுபாடின்றி இரவு பகலாக கொதிக்கும் வெயிலிலும் கொட்டும் மழையிலும் இங்கு முகாமிட்டுப் போராடி வருகின்றனர்.

நுகேகொட மிரிகானவிலுள்ள கோட்டாபயவின் தனிப்பட்ட இல்லத்துக்கு முன்னால் ஆரம்பமான மக்கள் பேரியக்கம் நாடெங்கும் வியாபித்து ஒரு வாரத்துக்கு மேலாக முழுமையான அமைச்சரவை இல்லாத அரச இயந்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. நிலைமையைச் சமாளிக்க அண்ணன் மகிந்தவும், தம்பி கோட்டாபயவும் எத்தனையோ பேச்சு வார்த்தைகளை பல மட்டங்களில் நடத்தியும் இதுவரை எதுவும் வெற்றி பெறவில்லை.

அரசாங்கக் கூட்டுக்குள் அமைச்சர்களாகவிருந்த விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார அணியினரின் பிரதான இலக்காகவிருந்த பசில் ராஜபக்சவிடமிருந்து நிதி அமைச்சர் பதவி பறிக்கப்பட்ட ஒரேயொரு விடயத்தைத் தவிர மிகுதி எல்லாமே பழையபடிதான்.

யார் என்னதான் கோசித்தாலும் தாம் பதவி விலகப் போவதில்லையென்ற நிலைப்பாட்டில் கோட்டாபய விடாப்பிடியாகவுள்ளார். இதன் பிரதிபலிப்பாக, காலிமுகத்திடலில் கூடியிருப்பவர்கள் அந்த இடத்தில் - கோட்டா கோ கம (கோட்டா கோ கிராமம்) எனப் பெயர்ப்பலகை நாட்டி தொடர்ந்து போராடுகின்றனர்.

இதற்கு வலுவூட்டும் வகையில் கோட்டா கோ நூலகம், கோதா கோ பாடசாலை, கோட்டா கோ உணவகம் போன்ற பல பெயர்ப்பலகைகள் ஆங்காங்கே நாட்டப்பட்டுள்ளன. இவற்றுள் இறுதியாகச் சூட்டப்பட்டது புதிய வகை குப்பைத் தொட்டிகள். இருபதாவது அரசியல் திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு கோட்டாபயவுக்கு ஆதரவு வழங்கவென எதிரணியிலிருந்து பாய்ந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்கள் இந்தத் தொட்டிகளில் ஒட்டப்பட்டு, ஜனநாயகத்தை விற்பனை செய்தவர்கள் என்று கீழே பொறிக்கப்பட்டுள்ளது.

ராஜபக்சக்களிடம் கையூட்டல் பெற்று பல்டி அடித்தவர்கள் என்பது இதற்கான அர்த்தம்.

தொங்குநிலையிலுள்ள ஆட்சித்தரப்பு இன்றும் அவ்வழியிலேயே பயணிக்கிறது. சுயாதீனமாக செயற்பட முடிவெடுத்த சிறீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த சாந்த பண்டாராவுக்கு ராஜாங்க அமைச்சர் பதவி கொடுத்து தம்பக்கம் இழுத்துள்ளது. இத்தொடரில் இன் னும் சிலர் பேரம் பேசப்படுகின்றனர்.

வேட்டி மட்டுமன்றி கௌபீ சணமும் அவிழும் நிலையிலுள்ள அரசு, வங்குறோத்து நிலையை பிரகடனம் செய்துள்ளது. ஆங்கிலத்தில் இதனை பாங்கிரப்சி என்பர். வெளிநாடுகளில் பெற்ற கடனை அதற்குரிய தவணைக் காலத்தில் செலுத்த முடியாதென்று அரசு அறிவித்துள்ளது. சில தனிநபர்களும் இவ்வாறு வங்குறோத்து நிலைக்குச் செல்வது வழக்கம். இவ்வாறு வங்குறோத்து நிலைக்குச் செல்பவர்களை - எட்டாம் கட்டைக்கு எழுதப்பட்டவர்கள் என்று, தமிழில் சிலேடையாகக் கூறுவர். இதுவே இன்றைய கோட்டா ஆட்சியின் நிலைமை.

**மக்களின் தன்னெழுச்சிப் போராட்ட இலக்கைத் தணிக்கவும், காலத்தை இழுத்தடித்து அவர்களின் ஊக்கத்தைக் குலைக்கவும் ராஜபக்சக்கள் தந்திரோபாயமாக திட்டமிட்டு செயற்படுகின்றனர். காலிமுகத் திடலை காணிவேல் தளமாக மாற்றினால் அது ராஜபக்சக்களுக்கே சாதகமாகிவிடும். போராட்டத்தின் வெற்றிக்கு வேகம் மட்டும் போதாது. விவேகம் அதற்குத் துணையாக்கப்பட வேண்டும்.**




இந்த சந்தர்ப்பத்தை போராடுபவர்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும். காலிமுகத் திடலை காணி வேலாக்கக் கூடாது. விடுமுறைகால கொண்டாட்டங்கள் போல மாற்றக்கூடாது. அவித்த மரவள்ளிக் கிழங்கும், புரியாணியும் புதுவருடத்துக்கான கொண் டைப் பணியாரமும் வழங்குவதற்கு அளவுக்கு மீறிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் பார்வை வேறுபட லாம். மழைக்காக அங்கு அமைக்கப்பட்டிருக்கும் கூடாரங்களைப் பார்த்து, எந்த வெளிநாடு இதன் பின்னணியில் நிற்கிறது என்று கேள்வி எழுப்பவும் இடமளிக் கக்கூடாது.

பேரம் பேசுவதற்கான அரிய சந்தர்ப்பத்தை கைவிட்டு அரசியல் கட்சிகள் ஆங்காங்கே கூடிக்கலைகின்றன. இந்த சந்திப்புகள் அனைத்திலும் தவறாது பங்குபற்றும் ஒரேயொரு தமிழர் கூட்டமைப்பின் சுமந்திரன். பிரதமர் மகிந்தவையும் தனிமையில் சந்தித்து உரையாடியுள்ளார். ஆனால், தாம் கூட்டமைப்பின் பிரதிநிதியாக இவைகளில் சம்பந்தப்படவில்லையென்று விளக்கம் வேறு கொடுக்கிறார். அரசியலைப் பொறுத்தளவில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக தாம் இல்லாவிடின் இந்த சந்திப்புகளுக்கு சந்தர்ப்பம் கிடைக் குமா என்பதை சுமந்திரன் ஒரு தடவை தமக்குத் தாமே கேட்க வேண்டும்.

இப்போதுள்ள நிலையற்ற இலங்கை அரசியல் சூழலில் எதிரணிகள் எதனைச் செய்ய முனைந்து கொண்டி ருக்கின்றன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட முன் முயற்சிகளின் அடிப்படையில் இதனை மூன்று வகையாகப் பார்க்கலாம்:

1. கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புவது, ராஜபக்சக்களின் குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டுவது, இடைக் கால அரசு ஒன்றை அமைப்பது என்பவை முதலாவதாக வந்தன. எதிரணிகள் தமக்குள் ஒன்று பட்டு செயற்படத் தவறியதால் இது சாத்தியப்படாமல் போயிற்று. இந்த நிலைமையை தமக்குச் சாதகமாக பயன் படுத்த முனையும் மகிந்த, தமது பிரதமர் பதவியை புதல்வர் நாமல் ராஜபக்சவுக்கு பெற்றுக் கொடுக்க காரியங்களை ஆற்றுவதாக ஒரு செய்தி வந்துள்ளது.

2. ஜனாதிபதியின் மீது நம்பிக் கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் களிடம் ஒப்பம் பெறப்படுகிறது. சஜித் பிரேமதாச இதில் ஒப்பம் இட்டிருப் பதற்கு செய்திகள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. அறுதிப் பெரும் பான்மைக்குரிய ஒப்பங்கள் பெறத் தவறின், இதுவும் சாத்தியப்படாது. சஜித் மீதுள்ள வெறுப்பினால் ரணில் விக்கிரமசிங்க கோதபாய தரப்புக்கு ஆதரவு வழங்கி வருவதையும் கவனிக்க முடிகிறது. நம்பிக்கையில்லாப் பிரே ரணை வெற்றி பெறுமானால் தற்போதைய பிரதமர் அறுபது நாட்களுக்கு ஜனாதிபதி பதவியை வகித்தவாறு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்றம் தன்னைத் தயார்படுத்த வேண்டும். இதுகூட தற்போ தைய அரசியல் அமைப்பில் திடமாகக் காணப்படவில்லையென்று சில தரப்புகளால் சுட்டிக்காட்டப்படுகிறது.

3. இம்பீச்மன்ட் என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஜனாதிபதியை பதவி நீக்கும் குற்றவியல் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றும் முயற்சியும் இடம்பெறுகிறது. இதற்கான ஆவணத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பம் பெறப்படுகிறது. இது எந்தளவுக்குச் சாத்தியமாகும்? இதனை தெரிந்து கொள்வதற்கு 1991ம் ஆண்டின் நிகழ்வொன்றுக்கு நினைவை கொண்டு செல்ல வேண்டும்.

1991 செப்ரெம்பர் மாதத்தில் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவை பதவி நீக்க முன்னெடுக்கப்பட்ட குற்றவியல் பிரேரணை எவ்வாறு கருவிலேயே கலைக்கப்பட்டது என்பதை பலரும் மறந்திருக்கலாம். பிரேமதாசவுடன் ஒத்துப்போகாத அமைச்சர்களான லலித் அத்துலத் முதலியும், காமினி திசநாயக்கவும் இம்முயற்சியில் மிகமிக ரகசியமாக ஈடுபட்டு பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பங்களைப் பெற்று சபாநாயகரிடம் கையளிக்கவிருந்த வேளையில், சபாநாயகர் எம்.எச்.மொகமட் தீடிரென நாடாளுமன்ற கூட்டத்தொடரை காலவரையின்றி ஒத்தி வைத்தார்.


அத்துடன் நிறுத்தாது, பிரேரணையில் ஒப்பமிட்டவர்களில் சிலர் அது தங்களுடைய ஒப்பமில்லையென்று கூறியதாகவும் தெரிவித்து பிரேரணையை நிராகரித்தார். ஜனாதிபதி பிரேமதாசவின் ஆலோசனையில் (உத்தரவில்) இது இடம்பெற்றது என்பது பரம ரகசியம். இதன் அடுத்த கட்டமாக லலித் அத்துலத் முதலியையும் காமினி திசநாயக்கவையும் அமைச்சர் பதவியிலிருந்து பிரேமதாச வெளியே வீசினார்.


இப்போது நாடாளுமன்ற சபாநாயகராக இருப்பவர் கோட்டாபயவின் கட்சியைச் சேர்ந்த அவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். இவரும் அன்றைய சபாநாயகர் மொகமட் போன்றே நடந்து கொள்வார் என்பது நிச்சயம். இந்தச் சூழ்நிலையில் குற்றவியல் பிரேரணை எதிர்பார்க்கும் பலனை அளிக்காதென்றே சொல்ல வேண்டும். மறுபுறத்தில் மக்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தை இழுத்தடித்து, அவர்களின் ஊக்க சக்தியை குறைப் பதில் ராஜபக்சக்கள் சாதுரியமாக செயற்படுகிறார்கள். கள நிலைவரமும், ராணுவ பக்கபலமும், எதிரணியினரை கையூட்டி தம்வசப்படுத்துவதும் ராஜபக்சக்களுக்கு சாதகமாகவே உள்ளது.

போராட்டம் நடத்துபவர்கள் - முக்கியமாக இளந்தலைமுறையினர் தங்கள் நோக்கம் நிறைவேற வேண்டுமெனில் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. எப்படிப் போராடுகிறோம் என்பது முக்கியமல்ல, எதற்காக போராடுகிறோம் என்பதை மறவாது அதற்கான பாதையில் பயணிக்க வேண்டும்.


# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுங்கள் எது?



1) 2) 3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3  4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..............................

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..............................

iii) அ்.றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..............................

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..............................

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..............................

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..............................

(6 புள்ளிகள்)

02) அ்.றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..............................

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

37. 1 38. 2 39. 1 40. 2

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1

**18.04.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**18.04.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மருந்துகளுக்கு தட்டுப்பாடு மக்களுக்கு பாதிப்பு இல்லை!

## கல்முனை சுகாதார பணிப்பாளர் பெருமிதம்

கல்முனை, ஏப். 2




மருந்து தட்டுப்பாட்டு நிலவுகின்றபோது பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில்நிலைமையை கையாள்கிறோம் என்று கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றிபாஸ் தெரிவித்துள்ளார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், பொருளாதார நெருக்கடி காரணமாக நாடு முழுவதும் மருந்துகளுக்கான தட்டுப்பாடு தவிர்க்க முடியாத அளவில் ஏற்பட்டுள்ளது.

எனினும், கல்முனை பிராந்தியத்தில் மருந்து தட்டுப்பாடு ஏற்படாத வகையில் நாம் முகாமை செய்து வருகின்றோம். பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தற்போது நிலைமை கட்டுக்குள் உள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதித்தோருக்கு நீதி வேண்டும்!

## கல்முனையில் நேற்று கவனவீர்ப்பு

கல்முனை, ஏப். 18

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி வேண்டும் என்று வலியுறுத்தி கல்முனை திரு இருதயநாதர் ஆலயம் முன்பாக உயிர்த்த ஞாயிறு தினமான நேற்று கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.**

ஆலயத்தில் உயிர்த்த ஞாயிறு ஆராதனையின் பின்னராக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.



கல்முனை திரு இருதயநாதர் ஆலய பங்குத்தந்தை அருளானந்தன் தேவதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் பங்கேற்று 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதி வேண்டும் என்று கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது, "கர்தினாலின் குரலுக்கு செவிசாயுங்கள்", "இனவாதம் காட்டி உறவுகளை பிரிக் காதீர்கள்", "இறந்து போனவர்களுக்கான கண்ணீர் அஞ்சலி அவர்களுக்கு நீதி வேண்டும்", என்ற சுலோகங்களை தாங்கியிருந்தனர். அத்துடன், அது சார்ந்த கோஷங்களையும் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தின்போது பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் கொழும்பு, மட்டக்களப்பில் ஈஸ்டர் ஆராதனையின்போது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களில் 250 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். 400 பேர் காயமடைந்தனர். தாக்குதல் நடந்து மூன்று ஆண்டுகள் கடந்தும் இதுவரை எவருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மின்னல் தாக்கியதில் இருவர் உயிரிழப்பு

திருகோணமலை, ஏப். 18

ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களை மின்னல் தாக்கியதில் இருவர் உயிரிழந்தனர்.

திருகோணமலை - புல்மோட்டையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.இந்தச் சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த 70 வயது நபரும் ஹமாஸ் நகரை சேர்ந்த 35 வயது நபருமே உயிரிந்தனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)







2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தில் தாக்குதலுக்கு இலக்கான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் நேற்று உயிர்த்த ஞாயிறு தின ஆராதனைகளும் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றபோது...!



# மட்டக்களப்பில் கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, ஏப். 18

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சையடி பிரதேசத்திலுள்ள பிரம்பு காட்டுப் பகுதியில் கைவிடப்பட்டிருந்த கைகுண்டு ஒன்று மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை இந்தக் கைக்குண்டு மீட்கப் பட்டதாகக் கொக்குவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசேட புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து கொக்குவில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்



பதிகாரி தலைமையிலான பொலிஸார் கைவிடப்பட்ட கைகுண்டை மீட்டுள்ளனர்.

மேலும், குறித்த குண்டு பழுதடைந்துள்ளதால் நீதிமன்ற அனுமதியைப் பெற்றுச் செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர். (ஐ)

# அரசியலமைப்புடன் விளையாடாதீர்கள்!

## அரசுக்கு சஜித் எச்சரிக்கை



திருக்கோவில், ஏப். 18

"ஒரு நாட்டின் அரசியலமைப்பு என்பது மிகவும் சக்தி வாய்ந்தது. எனவே, அதனுடன் விளையாடவேண்டாம்", இவ்வாறு கூறியுள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

"ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஓர் மூச்சு" என்ற திட்டத்துக்கு அமைவாக, அம்பாறை - திருக்கோவில் தள வைத்தியசாலைக்கு 27 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய வைத்தியசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், அரசாங்கத்தைவிட அரசியலமைப்பு சக்தி வாய்ந்தது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஜனநாயக ரீதியில் போராடும் மக்களுக்கு எதிராக அச்சுறுத்தல், அடக்குமுறை மற்றும் மேலாண்மையை பிரயோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமானால் போராடும் மக்கள் முன்னின்று அவர்களைப் பாதுகாக்கும் கேடயமாக மாறுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருக்கின்றது.

அரசியலமைப்பின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குடும்பத்துக்கும் அரசாங்கத்துக்கும்கூட அதிகாரம் இல்லை.

மாளிகையில் வசிக்கும் ஜனாதிபதிக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ, மக்களின் போராட்டக் குரல் கேட்கவில்லை. மக்கள் போராட்டத்தின் அனைத்து கோரிக்கைகளையும் ஐக்கிய மக்கள் சக்தி உணர்ந்து செயல்படுகிறது.

ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை, அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை போன்று, 20ஆவது திருத்தத்தை நீக்கி விட்டு 19 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்கும் உறுதியாக உள்ளோம் - என்றார். (கே)



### துனீசியாவில் சுற்றுச்சூழல் பேரழிவு

## 1000 தொன் எரிபொருளுடன் கடலில் மூழ்கியது கப்பல்!

*துனீஷ, ஏப். 18*

ஆயிரம் தொன் எரிபொருளுடன் வணிக கப்பல் ஒன்று துனீசிய கடலில் மூழ்சியுள்ளது. இதனால் சுற்றுச் சூழல் பேரழிவு ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கேப்ஸ் கடற்கரையில் மூழ்கிய இந்தக் கப்பலால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பேரழிவைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை துனீசிய அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கினியாவிலிருந்து மோல்டாவுக்குச் சென்று கொண்டிருந்த கப்பலில் இருந்து ஏழு பணியாளர்களையும் துனீசிய கடற்படை மீட்டுள்ளது. தெற்கு நகரமான கேப்ஸிலிருந்து ஏழு மைல் தொலைவு பகுதிக்கு பேரிடர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மோசமான வானிலையே இச்சம்பவத்திற்குக் காரணம் என்றும், கப்பலுக்குள் இரண்டு மீற்றர் உயரத்துக்கு தண்ணீர் புகுந்தது என்றும் துனீசிய சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுச்சூழல் பேரழிவைத் தவிர்க்கவும், பாதிப்பையும் குறைக்கவும் அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் துனீசிய சுற்றுச்சூழல் அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் கலந்துள்ள எரிபொருளை உறிஞ்சுவதற்கு முன், எரிபொருளின் பரவலைக் கட்டுப்படுத்த ஏதுவாக கப்பலை சுற்றி தடுப்புகள் அமைக்கப்படும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

துனீசியாவின் கேப்ஸ் கடற்கரை பல ஆண்டுகளாக பெரும் மாசுபாட்டை அனுபவித்து வருகிறது. அந்தப் பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் கழிவுகளை நேரடியாக கடலில் கொட்டுவதாக சுற்றுச்சூழல் அமைப்புகள் குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## அணு ஆயுதத் திறனை மேம்படுத்தும் ஏவுகணைகளை ஏவியது வடகொரியா!

*பியோங்யொங், ஏப். 18*

அணுசக்தி திறனை மேம்படுத்தும் நோக்குடன் இரண்டு புதிய ஏவுகணைகளை ஏவி வடகொரியா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சோதனை நடத்தியுள்ளது. இந்தச் சோதனையை வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன் நேரில் அவதானித்தார் என்று வட கொரிய அரச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வட கொரியா மிக விரைவில் அணு ஆயுத சோதனையை மீண்டும் தொடங்க முயல்கிறது என்று தென் கொரியா மற்றும் அமெரிக்க அதிகாரிகள் ஏற்கனவே எச்சரித்துள்ள நிலையில் இந்த சோதனை இடம் பெற்றுள்ளது.

கடந்த மாதம் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் தூரம் அணு ஆயுதங்களை சுமந்து சென்று இலக்கை துல்லியமாக தாக்கக் கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை நடத்தியதை அடுத்து வட கொரியா மீதான தடைகள் மேலும் இறுக்கமாகின. இந்த நிலையில் மற்றொரு முக்கிய ஆயுத சோதனையாகவும் இது அமைந்துள்ளது.

வடகொரியாவின் ஹேம்ஹங் பகுதியில் வைத்து இன்று காலை பரிசோதனை செய்யப்பட்ட இந்த இரு ஏவுகணைகளும் 110 கிலோ மீற்றர்கள் தொலைவை சென்று தாக்கியுள்ளன. அதிகளவாக 25 கி.மீ. உயரத்திற்கு இந்த ஏவுகணைகள் பறந்து சென்றுள்ளன என தென் கொரியாவின் இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் நேற்று பரிசோதனை செய்யப்பட்ட இரண்டு ஏவுகணைகள் குறித்த எந்த மேலதிக விபரங்களையும் வட கொரிய அரச செய்தி நிறுவனமானம் வெளியிடவில்லை. ஆனால் இது வட கொரியாவின் அணுசக்தி நோக்கங்களுடன் இணைந்தது எனத் தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனை நீண்ட தூர ஆயுதங்களின் திறனை மேம்படுத்துவதற்கான நோக்கத்துடன் அமைந்திருந்ததாகவும் கே.சி.என்.ஏ. கூறியுள்ளது. (ஐ)

---

# ரஷ்யாவின் அணு ஆயுதத் தாக்குதலை எதிர்கொள்ள உலகம் தயாராகவேண்டும்!

### உக்ரைன் ஜனாதிபதி எச்சரிக்கை

*கீவ், ஏப். 18*

ரஷ்யாவின் அணு ஆயுதத் தாக்குதலை எதிர்கொள்ள உலகம் தயாராக இருக்க வேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தலைநகர் கீவில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்தில் இருந்து சி. என். என். ஜேக் தாப்பருக்கு அளித்த பிரத்யேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



விளாடிமிர் புடின் அணு ஆயுதங்கள் அல்லது இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதல்களை ஆரம்பிக்கலாம். ஏனெனில், அவர் உக்ரைன் மக்களின் உயிர்களை ஒருபோதும் மதிப்பதில்லை.

ரஷ்யாவுக்கு நாம் அஞ்ச வேண்டியதில்லை. ஆனால், தயாராக இருக்க வேண்டும். ரஷ்யா அணு ஆயுதங்களை பயன்படுத்தினால் அது உக்ரைனுக்கு மட்டுமல்ல. முழு உலகத்துக்குமே ஆபத்து - என்றார்.

இதேவேளை, ரஷ்யாவின் போர் கப்பல் உக்ரைன் படைகளால் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மூழ்கடிக்கப்பட்டதையடுத்து உக்ரைன்மீது ரஷ்யா மீண்டும் மூர்க்கத்தனமாக தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

தலைநகர் கீவில் உள்ள ஆயுதத் தொழிற்சாலையை நீண்ட தூரம் சென்று தாக்கும் ஏவுககணைகளை பயன்படுத்தி ரஷ்யா அழித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## ரஷ்ய படைகளிடம் வீழ்ந்தது உக்ரைனின் மரியூபோல் நகரம்!

*மொஸ்கோ, ஏப். 18*

உக்ரைன் தெற்கு துறைமுக நகரமான மரியூபோல் கிட்டத்தட்ட ரஷ்யப் படைகளால் முழுமையாக கைப்பற்றப்பட்ட நிலையில், அங்கு சில பகுதிகளில் எஞ்சியுள்ள உக்ரைன் படைகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடைய வேண்டும் என ரஷ்யா கெடுவிதித்துள்ளது.

உயிர்களைக் காப்பாற்றி கொள்ள விரும்பினால் இன்று (நேற்று) ஞாயிற்றுக்கிழமை மொஸ்கோ நேரப்படி காலை 6 மணி முதல் வெள்ளைக் கொடிகளுடன் சரணடைய முடியும் என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

போரின் மிகக் கடுமையான சண்டை இடம்பெற்ற மரியூபோல் நகரம் பேரழிவுகளையும் சந்தித்துள்ளது. போரில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

இந்த நகரை கிட்டத்தட்ட முழுமையாக கைப்பற்றி விட்டதாக ரஷ்யா அறிவித்துள்ள நிலையில், பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீதான போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ரஷ்யாவிடம் வீழ்ந்த முதல் பெரிய நகரம் இதுவாகும்.

இதேவேளை, ரஷ்யாவின் சரணடையும் உத்தரவுக்கு உக்ரைன் இந்த செய்தி எழுதப்படும்வரை எந்த எதிர்வினைகளையும் பிரதிபலிக்கவில்லை.

மரியூபோல் நகரம் அசோவ் கடற்கரையில் உள்ள போரின் முக்கிய புள்ளியாக உள்ளது. அத்துடன், இந்த நகர போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்புக்கும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

2004இல் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்ட மேற்கில் கிரிமியா தீபகற்பத்திற்கும் கிழக்கே ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் பிராந்தியத்திற்கும் இடையிலான பாதையில் மரியூபோல் நகரம் உள்ளது.

மரியுபோல் நகரத்தை முழுமையாக கைப்பற்றுவதன் மூலம் கிரிமியாவிற்கு தரைப் பாலம் கட்டும் ரஷ்யாவின் முயற்சி வெற்றியடையும். அத்துடன், அசோவ் கடலின் முழு வடக்குக் கரையையும் கட்டுப்படுத்துவதற்கும் இது ரஷ்யாவுக்கு வாய்ப்பாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



---



## நோர்த் டாமில் மீட்கப்பட்ட கல்பேழையை திறக்க முடிவு

*பாரிஸ், ஏப். 18*

பாரிஸ் நோர்த் டாம் மாதா கோவிலின் நிலத்தடியில் இருந்து புராதன கல் பேழை ஒன்று அண்மையில் மீட்கப்பட்டது. இதனை திறந்து ஆய்வு செய்தவற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2019 இல் தீக்கிரையான மாதா தேவாலயத்தின் கூரை உட்பட அதன் கட்டுமானங்களைப் புனரமைக்கும் பணிகள் தற்சமயம் அங்கு நடைபெற்று வருகின்றன. இதன் போது தேவாலயத்தின் உள்ளே ஒரு பகுதியில் தரை தோண்டப் பட்ட சமயம் சுமார் இருபது மீற்றர் ஆழத்தில் கல்லாலான புராதன சவப்பேழை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

மனித உருவிலான - நன்கு பாதுகாக்கப் பட்ட-அந்த மர்மப் பேழை 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கக் கூடும் என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

அவர்கள் பேழையை திறக்காமலேயே அதன் உள்ளே இருக்கி ன்ற பொருள்களை என்டோஸ்கோபிக் கமெரா மூலம் ஆய்வு செய்துள்ளனர். எலும்புக் கூட்டின் மேற்பகுதி, இலைகளாலான தலையணை, துணி மற்றும் சில பொருள்களை உள்ளே அடையாளம் கண்டுள்ளனன.

பாதுகாப்பான இடம் ஒன்றில் வைக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பேழை விரைவில் தென் மேற்கு நகரமாகிய துளுசில் அமைந்துள்ள தேசிய தடயவியல் மருத்துவ நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் திறந்து பரிசோதிக்கப்படவிருப்பதாகத் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாருடையது என்ற அடையாளம் தெரியாத அந்த மனித எச்சம் எவ்வாறு, ஏன் நோர்த் டாம் தேவாலயத்தின் அமைவிடத்தின் கீழ் புதைக்கப்பட்டது? கடந்த பல நூற்றாண்டுகளாக அது அங்கேயே இருந்துவந்ததா,அல்லது அங்கு மீளப் புதைக்கப்பட்டதா? அதன் அடக்க வடிவமைப்பு முறை, அதன் காலம், இறந்தவரின் சமூக நிலை என்பன சொல்கின்ற செய்தி என்னவாக இருக்கும்? இவை போன்ற பல கேள்விகளை எழுப்கியிருக்கின்ற அந்தக் கல் பேழை தொடர் பான புதிர்களை அறிவதற்காக கத்தோலிக்கர்கள் உட்பட பிரான்ஸ் நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் காத்துள்ளனர். (ஐ)



ஐ. பி. எல் - இருபது - 20:

# பெங்களூரிடம் பணிந்தது டில்லி

மும்பை, ஏப். 18

ஐ. பி. எல். இருபது - 20 தொடரின் 27ஆவது போட்டியில் டில்லியை வீழ்த்தி பெங்களூர் அணி வெற்றிபெற்றது.

190 என்ற இலக்கை துரத்திய டில்லி அணிக்கு பிரிதிவி ஷா மற்றும் வோர்ணர் ஆரம்ப இணை பவர் பிளேயில் 50 ஓட்டங்கள் வரை சேர்த்தது. சிராஜ் இவர்களின் இணைப் பாட்டத்தைப் பிரித்தார். முதல் விக்கெட்டாக 16 ஓட்டங்கள் எடுத்திருந்த பிரிதிவி ஷா வெளியேறினார்.

இந்தப் போட்டியில் அறிமுகமான மிற்சல் மார்ஷ் மந்தமாக ஆட்டத்தைத் தொடங்கினாலும், அவரும் 14 ஓட்டங்கள் எடுத்திருந்த போது எதிர்பாராத விதமாக ரன் அவுட் ஆகினார்.

முன்னதாக, அரைச்சதம் கடந்திருந்த வோர்ணர் 66 ஓட்டங்கள் எடுத்திருந்த போது ஹசரங்கவின் பந்தில் எல். பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். இதன்பின் வந்தவர்களில் ரிஷப் பந்த் மட்டும் 34 ஓட்டங்கள் எடுத்தார். அவரைத் தவிர மற்றவர்கள் பெரிதாக ஓட்டங்களை சேர்க்காமல் ஒற்றை இலக்கத்தில் நடையை கட்டினார்.

இறுதிக்கட்டத்தில் அடுத்தடுத்து விக்கெட் விழ, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் டில்லி அணி 7 விக்கெட் இழப்புக்கு 173 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வெற்றி பெற்றது.

பெங்களூர் அணி தரப்பில் ஹசில்வூட் மூன்று விக்கெட்களும், சிராஜ் இரண்டு விக்கெட்களும் வீழ்த்தினர்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி அணியின் தலைவர் ரிஷப் பந்த் பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி, பெங்களூர் அணிக்கு டூ பிளஸிஸ், அனுஜ் ராவத் இணை தொடக்கம் கொடுத்தது. 2ஆவது ஓவரிலேயே அனுஜ் ராவத் ஓட்டம் எதுவும் எடுக்காமல் விக்கெட்டை இழந்தார்.

அடுத்த ஓவரில் டூ பிளஸிஸ் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நிலைத்து ஆடுவார் என நம்பியிருந்த விராட் கோலியும் 12 ஓட்டங்களுடன் ரன்அவுட் ஆகி நடையைக் கட்டினார். தொடர்ந்து வந்த பிரபு தேசாயும் பெரிதாக சோபிக்கவில்லை. 34 பந்துகளில் 55 ஓட்டங்களை எடுத்து பெங்களூர் அணிக்கு பெரிதும் நம்பிக்கை அளித்த மக்ஸ்வெல்லை குல்தீப் யாதவ் வெளியேற்ற 12 ஓவர்களில் அந்த அணி 5 விக்கெட்டை இழந்து 95 ஓட்டங்களை சேர்த்தது.

இதனையடுத்து களமிறங்கிய தினேஷ் கார்த்திக்கும், ஷபாஸ் அகமதுவும் தடுமாற்றத்திலிருந்து பெங்களூர் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டை இழந்து, 189 ஓட்டங்களை எடுத்தது. தினேஷ் கார்த்திக் 66 ஓட்டங்களும், ஷபாஸ் அகமது 32 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். (ஐ)

# இலங்கை வருகிறது பாகிஸ்தான் அணி!

கொழும்பு, ஏப். 18

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி எதிர்வரும் ஜூலை - ஒகஸ்ட் மாதங்களில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடத் தயாராகவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் விளையாடவுள்ளன.

இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் ஆலோசனை நடத்திய பின்னர் போட்டிகள் நடைபெறும் திகதிகள் மற்றும் மைதானங்களை இறுதிசெய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னர் பாகிஸ்தான் அணி ஜூன் மாதம் மேற்கிந்திய தீவுகள் சென்று அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)



# இந்திய அணியில் கார்த்திக்குக்கு இடம்!

## விராட் கோலி

மும்பை, ஏப். 18

தினேஷ் கார்த்திக்கின் ஆட்டத்துக்காக இந்திய அணியில் அவருக்கு இடம் கிடைக்கும் என்று விராட் கோலி கூறியிருக்கிறார்.

டில்லி அணிக்கு எதிரான போட்டியில் தினேஷ் கார்த்திக்கின் அதிரடி ஆட்டத்தால் பெங்களூர் அணி வெற்றி பெற்றது.

இந்தப் போட்டி நிறைவடைந்த பின்னர் தினேஷ் கார்த்திக்கும் விராட் கோலியும் சிறப்பு நேர்காணல் ஒன்றில் பங்கேற்றினர். இதன்போது கோலி மேலும் கூறுகையில்,

“நான் இது போன்ற நேர்காணலை அதிகம் செய்யவில்லை. இன்று இதை செய்வதற்கு ஒரு சிறப்பான இரவு. இதுவரையான போட்டிகளில் ஐ. பி. எல். நாயகனுடன் நான் இங்கே இருக்கிறேன்.

அவர் மிகப்பெரிய இலட்சியத்தை நோக்கி பயணிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இருபது - 20 கிரிக்கெட்டில் பெங்களூர் அணிக்காக மட்டுமல்ல, இந்தியாவுக்காக விளையாடும் அளவுக்கு மிகப்பெரிய அளவில் அவர் தன்னை நிரூபித்துள்ளார். உங்கள் ஆட்டத்தைப் பார்த்து ஏபி டிவில்லியர்ஸ் நிச்சயம் பெருமைப்படுவார்”- என்றார்.



# கே. எல். ராகுல் அதிரடி சதம் லக்னோ அணி அபார வெற்றி!

மும்பை, ஏப். 18

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரில் 5 முறை சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணியை 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ்.

மும்பை பிரபோர்ன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 199 ஓட்டங்களை குவித்தது. தனது 100ஆவது ஆட்டத்தில் களமிறங்கிய அணித் தலைவர் கே. எல். ராகுல் 60 பந்துகளில், 5 சிக்ஸர்கள், 9 பெண்ட்ரிகளுடன் 103 ஓட்டங்களை விளாசி ஆட்டமிழக்காமல் இருந்தார்.

குயின்ரன் டி கொக் 24, மனீஷ் பாண்டே 38, மார்கஸ் ஸ்றொய்னிஸ் 10, தீபக் ஹூடா 15, குர்ணல் பாண்ட்யா 1 ஓட்டங்களை சேர்த்தனர். மும்பை அணி தரப்பில் ஜெயதேவ் உனத்கட் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.



200 ஓட்டங்கள் என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மும்பை அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 181 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

இஷான் கிஷன் 13, ரோஹித் சர்மா 6, டெவால்ட் பிரெவிஸ் 31, சூர்யகுமார் யாதவ் 37, திலக் வர்மா 26, பேபியன் அலன் 8, கிரன் பொலார்ட் 25, ஜெயதேவ் உனாகட் 14, முருகன் அஸ்வின் 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

லக்னோ அணி தரப்பில் ஆவேஷ் கான் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். 18 ரன்கள் வித்தியாசத்தில் மும்பையை வீழ்த்திய லக்னோ அணிக்கு இது 4ஆவதுவெற்றியாக அமைந்தது. அந்த அணி 8 புள்ளிகளுடன் பட்டியலில் 2ஆவது இடத்துக்கு முன்னேறியது.

6 போட்டிகளில் விளையாடி உள்ள லக்னோ அணி 2 தோல்விகளை மட்டுமே பெற்றுள்ளது. இதேவேளை மும்பை அணி தொடர்ச்சியாக 6ஆவது தோல்வியை சந்தித்துள்ளது. அந்த அணி இந்தத் தொடரில் இதுவரை ஒரு வெற்றியைக்கூட பதிவு செய்யவில்லை. (ஐ)

# இராணுவம் மீதான குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரங்கள் இல்லாதவை!

## இராணுவம் அறிக்கை



கொழும்பு, ஏப். 18

**இராணுவத்தினர் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் முயற்சிகளை பொதுமக்கள் மத்தியில் பிரசாரம் செய்து நாடு முழுவதும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் இராணுவத்தை களங்கப்படுத்தும் முயற்சிகள், இராணுவத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"கடந்த சில நாட்களாக, பல்வேறு குழுக்களும், தங்களது சொந்த நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப, இராணுவம் வன்முறையைத் தூண்டுவதற்குத் தயாராகி வருவதாகவும், தாக்குதலுக்கு முன் பயிற்சி பெறுவதாகவும் முற்றிலும் பொய்யான அடிப்படையற்ற பிரசாரங்களை மேற்கொண்டு வருவது அவதானிக்கப்படுகிறது. ஆயுதப் படையைச் சேர்ந்த எவரும் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடவில்லை எனவும், இவ்வாறான அறிக்கைகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்பதுடன் இந்த செயல்பாடுகளில் இன்று வரை ஒரு சிப்பாய்கூட ஈடுபடவில்லை என்பது அறியத்தக்க விடயமாகும்.

"சமூக வலைத்தளங்களில் பரவிவரும் இத்தகைய தீங்கிழைக்கும் பிரசாரங்களில், "இராணுவ வைத்திய சாலையில் ஊழல் குற்றச்சாட்டு" மற்றும் இராணுவத்தின் கட்டமைக்கப்பட்ட மற்றும் நன்கு நிறுவப்பட்ட இராணுவ ஆலோசனை குழுக்கள் அல்லது நிறுவப்பட்ட ஒப்பந்த நடைமுறைகள் பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்களின் தவறான அறிக்கைகள் ஆகியவை அடங்கும். இத்தகைய தவறான மற்றும் தீங்கிழைக்கும் அறிக்கைகளை இராணுவம் கடுமையாக மறுக்கிறது.

"அனைவருக்கும் அறிந்த வகையில் ஆயுதப் படையினர் கடந்த சில நாட்களில், அந்த அமைதியான போராட்டக்காரர்கள் அல்லது அமைப்புகள் எதிலும் தலையீடு இல்லாமல் மகத்தான மற்றும் விலைமதிப்பற்ற சேவைகள் மூலம் இந்த நாட்டிற்கு அமைதியை ஏற்படுத்திய ஒரு அமைப்பின் ஒழுக்கமான உறுப்பினர்களாக அவர்கள் நாட்டின் நலன்களுக்கு எதிராகவும் செயல்படவில்லை.

இராணுவத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த மோசமான நடவடிக்கைகளை இராணுவம் மிகவும் வலுவாகவும் திட்டவட்டமாகவும் நிராகரிப்பதோடு, அதே சமயம் இந்த நாட்டின் பிரஜையாக உணர்வும், சரியான எண்ணமும் கொண்ட குடிமக்களை, சிப்பாய்கள் மீது முழு நம்பிக்கை வைக்குமாறு வலியுறுத்துகிறது. தற்போது பணியாற்றும் சிப்பாய்கள் அதிக பயிற்சி பெற்றவர்களாகவும், தொழில் ரீதியில் தகுதியுடையவர்களாகவும், எந்தவொரு பாதுகாப்புச் சவாலையும் எதிர்கொள்ள முடியுமானவர்களாக இருக்கிறார்கள் என்பதோடு தற்போதைய சூழ்நிலையில் பொலிஸாரால் அழைக்கப்பட்டால் மட்டுமே பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குவர்.

இதேபோல், இராணுவப் பயிற்சியின் ஒரு பகுதியாக அனைத்து முகாம்களிலும் நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சி திட்டங்கள் தடையின்றி முன்னெடுக்கப்படுவதுடன் இது ஊடகங்களில் சில பிரிவினர்களால் குறிப்பிடுவது போல் வன்முறைக்கான புதிய எந்தவொரு முன்னெடுப்பும் அல்ல.

அரசியலமைப்பின் விதிகளுக்கு இணங்க, நாட்டையும் அதன் மக்களையும் முழு நேரமும் பாதுகாப்பதில் இராணுவம் உறுதியாக இருப்பதால், குறித்த திட்டமிட்ட சூழ்ச்சிகள் மற்றும் துரோக செயல்களால் பொதுமக்கள் தூண்டப்படவோ அல்லது தவறாக வழிநடத்தப்படவோ வேண்டாம் என்று பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ஐ)

# மகாவலி ஆற்றில் நீராடியவர் மாயம்

கொழும்பு, ஏப். 18

கண்டி கம்பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இல்லவத்துர பிரதேசத்தில் மகாவலி கங்கையில் நீராடிய ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளை பிரதேசத்தை சேர்ந்த 27 வயது நபரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

பொலிஸார், பிரதேச மக்கள் இணைந்து குறித்த நபரை மீட்கும் பணியை முன்னெடுத்து வருகின்றனர். (கே)

# படுகொலை சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஏப்ரல் 18

மாத்தறை கோட்டவில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அப்பு கேவத்தை பிரதேசத்தில் இடம் பெற்ற படுகொலை சந்தேக நபரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

கம்புருகமுவை பிரதேசத்தை சேர்ந்த 48 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரு குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட முறுகலில் கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டு நபரொருவர் படுகொலை செய்யப்பட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தப்பிச் சென்ற நிலையில் அவர் கைது செய்யப்பட்டார். (கே)

# கட்டளைகளை நிறைவேற்றமுன் நூறு தடவைகள் சிந்தியுங்கள்!

## இராணுவ தளபதி, பாதுகாப்பு செயலருக்கு சரத் அறிவுரை



கொழும்பு, ஏப். 18

பொதுமக்களால் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்தில் குழப்பத்தை தோற்றுவிக்கும் வகையிலான சட்ட விரோத கட்டளைகளை ராஜபக்ஷ அரசாங்கம் பிறப்பிக்குமேயானால், அவற்றை நிறைவேற்றுவதற்கு முன்னர் நூறுமுறை சிந்தித்துப் பாருங்கள் என்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன மற்றும் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரிடம் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா எம். பி. வலியுறுத் தியிருக்கின்றார்.

இதுகுறித்து அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்ட விடயம் வருமாறு,

"பாதுகாப்புச்செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன மற்றும் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகிய நீங்கள் இருவரும் தீவிர வாதத்தைத் தோற்கடிப்பதற்கான மனிதாபிமான செயல்முறையில் எனது கட்டளையின்கீழ் செயல்பட்டீர்கள்.

எனவே தற்போது நாட்டில் பொதுமக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் மிகவும் அமைதியான போராட்டத்தில் குழப்பம் விளைவிப்பதற்காக ஊழல் மிகுந்த அரசியல்வாதிகளால் வழங்கப்படும் சட்டத்திற்கு முரணான கட்டளைகள் தொடர்பில் நீங்கள் நூறுமுறை சிந்திப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

ஊழல்மிகுந்த, செயல்திறனற்ற நிர்வாகத்தின் விளைவாக இந்த நாட்டில் தமது வாழ்க்கையை முன்னெடுத்துச்செல்வதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி மற்றும் அழுத்தங்களால் பாதிக்கப்பட்ட சாதாரண மக்கள் அமைதியானதும், வன்முறைகளற்றதுமான விதத்திலும் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

எனவே, தமது அதிகா ரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு முயற்சிக்கும் ராஜபக்ஷ அரசாங்கம் அப்பாவி பொதுமக்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கு எந்தவொரு முயற்சியை மேற்கொண்டாலும், அது இந்த உலகிலேயே மிகவும் மோசமான செயல்பாடாகும்.

மனிதாபிமான செயல்முறையில் எனது கட்டளையின்கீழ் செயல்பட்ட வீரர்கள், ஒட்டுமொத்த உலகின்முன் அவமானப் படுத்தப்படுவார்கள் என்று நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

ஆகவே, மிகமோசமான ஆட்சியாளர்களால் பிறப்பிக்கப்படும் மக்கள் விரோத கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு முன்னர் நூறுமுறை சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ஐ)

# இடைக்கால அரசாங்கத்தில் எமக்கு நம்பிக்கையில்லை!

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஏப். 18

அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தியவர்களை மீண்டும் ஒன்றிணைத்து அமைக்கும் இடைக்கால அரசாங்கத்தின் ஸ்திரதன்மை மீது நம்பிக்கை கொள்ள முடியாது.

பொதுஜன பெரமுன தலைமையிலான அமைச்சரவையே ஸ்தாபிக்கப்படும் என அதன் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கத்துக்கு எதிராக திட்டமிட்ட வகையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசாங்கத்தில் இருந்துக் கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தியவர்கள் தற்போது பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்படுவதாக குறிப்பிட்டுக்கொண்டு இடைக்கால அரசாங்கத்தை அமைக்க முயற்சிக்கிறார்கள்.

இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும் யோசனைக்கு பிரதான எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்காத நிலையில் அரசாங்கத்துடன் இணக்கமாக செயல்பட்டுக்கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தியவர்களை ஒன்றிணைத்து இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பது எந்தளவுக்கு நம்பகத்தன்மையாக அமையும் என்பது கேள்விக்குறியான நிலையில் உள்ளது.

இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்தல் யோசனைக்கு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

அரசாங்கத்திற்கு துரோகமிழைத்த தரப்பினருடன் மீண்டும் ஒன்றிணைவதற்கு அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள நெருக்கடி நிலைமைக்கு எதிர்வரும் வாரம் சிறந்த தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். எதற்காகவும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதவி விலகமாட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் மறுசீரமைக்கப்பட்ட அமைச்சரவையை ஸ்தாபிக்க வேண்டும் என பெரும்பாலான தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அமைச்சரவையே ஸ்தாபிக்கப்படும் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

## நானே அடுத்த...

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ.

அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனைக்கு உபகரணங்களை கையளிக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டில் லஞ்சம் ஊழல் திருட்டு களவு அதிகரித்திருக்கின்றது. இன்று நாடு அதல பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது. பொறுமை காத்த மக்கள் வீதிக்கு இறங்கி இருக்கின்றார்கள். எங்கு பார்த்தாலும் ஆர்ப்பாட்டமும் - வரிசையும். காலிமுகத்திடலில் இளைஞர்களும் யுவதிகளும் கடந்த பல நாட்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

எந்தவிதமான அரசியல் தலையீடு இன்றி அவர்கள் சுயமாக முன்வந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறார்கள். சுதந்திரமாக நாங்கள் வாழ வேண்டும் விஷம் போல் ஏறி உள்ள விலைவாசி குறைக்க வேண்டும் என்றெல்லாம் கூறி அவர்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

நிச்சயமாக எமது அரசாங்கம் அமையப் போகின்றது. நான் ஜனாதிபதியாக வருவேன். எமது அரசாங்கத்தில் இப்போது இலஞ்சம், ஊழல், கொள்ளையிலே சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் சட்டத்துக்கு முன் நிறுத்தி தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்போம். அவர்களிடம் உள்ள அனைத்து டொலர்களையும் பறிமுதல் செய்து மக்களுக்காக நாங்கள் முதலீடு செய்யவிருக்கிறோம்.

காலிமுகத்திடலில் கூடியுள்ள மக்கள் தங்களுக்காக அல்லது கட்சிக்காக அந்த ஆர்ப்பாட்டத்தை செய்யவில்லை. நாட்டிலுள்ள 2 கோடியே 22 லட்சம் மக்களுக்காக செய்கின்றார்கள் - என்றார். (ஐ)

## காலிமுகத்திடலில்...

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக நாடு முழுவதும் நேற்று பல இடங்களிலும் போராட்டங்கள் தொடர்ந்தன.

இவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டு வருபவர் கள் தேசிய கொடியை ஏந்தியிருப்பதுடன் தேசிய கீதத்தையும் பாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இந்நிலையில், நேற்று காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழ் மொழியில் தேசிய கீதத்தை இசைத்தனர். அத்துடன், தேசியக் கொடிகளையும் ஏந்தியிருந்தனர். (ஐ)

## ஈஸ்டர்...

அத்துடன், நாடு முழுவதும் உள்ள பல தேவாலயங்களிலும் விசேட ஆராதனைகளின் பின்னர் கவனவீர்ப்பு போராட்டங்கள் நேற்று இடம்பெற்றன.

நாட்டில் கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தலைநகர் கொழும்பு மட்டக்களப்பு, நீர்கொழும்பில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தொடர் குண்டுத் தாக்குதல்களில் 39 வெளிநாட்டவர்கள், 3 பொலிஸார் உட்பட குறைந்தது 253 வரை கொல்லப்பட்டனர், 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் பலர் கைது செய்யப்பட்ட போதும், உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை என குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போராட்ட...

யில் ஏதேனும் தாக்கங்கள் உள்ளதா என்பதை தொடர்ந்து கண்காணிப்பதற்காக இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காலியில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவோரின் கூடாரத்தை அகற்றியமை தொடர்பில் முழுமையான விசாரணையை மேற்கொள்ளுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலி முகத்திடலில் பொலிஸ் வாகனங்கள் நிறுத்தப்பட்டு பின்னர் அகற்றப்பட்டிருந்தன.

இதன்பின்னர் அறிக்கையொன்றை வெளியிட்ட ஆணைக்குழு, பிரஜைகள் அமைதியாக ஒன்றுகூடுவதை சட்டவிரோத முறைமைகள் ஊடாக தடுக்க முயற்சிப்பது அடிப்படை உரிமை மீறல் என மனித உரிமைகள் ஆணைக்குழு அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

அமைதியாக ஒன்றுகூடுவதற்கு பிரஜைகளுக்கு உள்ள உரிமை, அரசியலமைப்பு ஊடாக பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## பண்ணையில்...

தில் ஒன்றுகூடியவர்கள் பண்ணை சுற்று வட்டம் வரையில் சில நூறு மீற்றர் தூரம் பேரணியாக தீப்பந்தங்களை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, “எங்கே எங்கே உறவுகள் எங்கே”, “சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்”, “பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு”, “கோட்டா அரசே வீட்டுக்குப் போ” போன்ற கோஷங்களை போராட்டக்காரர்கள் எழுப்பியதுடன் சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான கே. சயந்தன், விந்தன் கனகரட்ணம், ச. சுகிர்தன் மற்றும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளின்உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், இளைஞர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## அமைதி...

துள்ளார்.

போராட்டங்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் நாட்டின் பாதுகாப்புக்காகவும் அரசியலமைப்பை பாதுகாக்கவும் அனைத்து இலங்கையர்கள் மத்தியிலும் அமைதி மற்றும் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கும் பொலிஸார் ஒத்துழைப்பை கோரினால் மட்டுமே இராணுவ உதவி வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அமைதியான போராட்டங்களின் போது, பொது சொத்துக்கள் அல்லது தனியார் சொத்துக்களை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

## இடைக்கால...

போக்குவரத்து சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ரணில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இளைஞர்களின் கோரிக்கைக்கு அமைய ஒட்டுமொத்த அரசாங்கமும் விலக வேண்டும். மக்கள் உண்மையில் என்னை விரும்பினால், இடைக்கால அரசாங்கத்துக்கு குறுகியக் கால தலைமைத்துவத்தை வழங்குவதற்கு தயாராகவே இருக்கிறேன். தற்போதைய நெருக்கடி நிலைமைகளை ஒன்றரை வருடங்களுக்குள் தீர்க்க முடியும் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## பாடசாலை...

தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கோவிட் - 19 தொற்று நோய் காரணமாக பாடசாலைகள் நீண்ட காலத்திற்கு மூடப்பட்டிருந்த நிலையில் பாடசாலை நேரத்தை ஒரு மணி நேரத்தால் நீடித்து கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க வுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்திருந்தது.

எனினும், இந்த முடிவு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு நேற்று அறிவித்துள்ளது. (ஐ)

# 20ஐ ஆதரித்தவர்களுக்கு வேட்பு மனு வழங்காதீர்!

## மஹ்ரூப் எம். பி. கோரிக்கை

திருகோணமலை, ஏப். 18

20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட வேட்புமனு வழங்கக்கூடாதென அந்தக் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் இம்ரான் மஹ்ரூப் எம். பி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவருக்கு கடிதம் அனுப்பியுள்ள அவர், கடந்த பாராளுமன்ற தேர்தலில் எமது கட்சி சார்பாக போட்டியிட்ட முஸ்லிம் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்து அரசாங்கத்துடன் இணைந்துகொண்டனர். ஆனால், அவர்களின் கட்சி தலைவர் மட்டும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் உள்ளார்.

இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், எமது வாக்குகளை பெற்று பாராளுமன்றம் சென்று, கட்சிக்கும் வாக்களித்த மக்களுக்கும் துரோகம் செய்தவர்களுக்கு எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட வேட்புமனு வழங்கக் கூடாது என எமது கட்சி ஆதரவாளர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை வாழ் முஸ்லிம்களின் நிலைப்பாடும் இவ்வாறே உள்ளது என நினைக்கிறேன். ஆகவே இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து இந்த பாராளுமன்ற உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால செயற்பாடுகள் எதிலும் இணைத்துக்கொள்ளக் கூடாது - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மூடப்படும் அபாய நிலையில் நுரைச்சோலை மின்நிலையம்!



கொழும்பு, ஏப். 18

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையமானது நிதிப் பற்றாக்குறை காரணமாக, 34 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான 120,000 மெற்றிக் தொன் நிலக்கரியை இறக்குமதி செய்ய சிரமங்களை எதிர்கொண்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 12 ஆம் திகதி முதல் நுரைச்சோலை கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ள இரண்டு கப்பல்களின் உரிமையாளர்களும் இன்றைய தினம் உரிய தொகையை செலுத்தாவிட்டால், சரக்குகளை இறக்காமல் புறப்படுவோம் என தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக ஆறு நாட்களுக்கான அதிக அபராதத்துடன் தொகையை செலுத்த வேண்டியிருக்கும் என்றும் தற்போதுள்ள நிலக்கரி மின் உற்பத்திக்கு போதுமானதாக இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த தொகுதி நிலக்கரி செப்ரெம்பர் மாதமே கொண்டுவரப்படும். இதனால், இந்த மாத இறுதிக்குள் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நிலக்கரி இறக்குமதி செய்யும் காலம் தொடங்கும் வரை இருக்கும் நிலக்கரியை பயன்படுத்துவதற்காக லக்விஜய மின்நிலையத்தில் உள்ள 300 மெகாவாட் திறன் கொண்ட ஒரு தொகுதியை குறைந்தபட்சம் 25 நாட்களுக்கு மூடுவதற்கு மின்சாரசபை நிர்பந்திக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது உற்பத்தித் திறனைக் கடுமையாகப் பாதிக்கும் எனவே, தற்போதுள்ள மின்வெட்டுக் காலத்தை நீட்டிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

# நம்பிக்கையில்லா பிரேரணை; கூட்டமைப்பின் முடிவு நாளை!

யாழ்ப்பாணம், ஏப். 18

ஐக்கிய மக்கள் சக்தியினால் கொண்டுவரப்படும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை ஆகியவை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானம் நாளை செவ்வாய்க்கிழமை எடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்,

ஜனாதிபதிக்கு எதிரான குற்றவியல் பிரேரணை மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழு கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதன்போது கூட்டமைப்பு இந்தப் பிரேரணைகள் தொடர்பில் எடுக்கவுள்ள தீர்மானம் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி செய்யப்படவுள்ளது - என்றார்.

இதேவேளை, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் பீடக் கூட்டம் வவுனியாவில் இடம்பெற்றபோதும் இந்த விடயம் சம்பந்தமாக இறுதி தீர்மானமொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பெற்றோல்...

இதன்படி, 92 ஒக்ரெய்ன் பெற்றோலின் விலை 338 ரூபாயாகவும் 95 ஒக்ரெய்ன் பெற்றோலின் விலை 367 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இதேநேரம், ஓட்டோ டீசலின் விலை 289 ரூபாயாகவும், சுப்பர் டீசலின் விலை 327 ரூபாயாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

## புதிய...

யேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைச்சரவையில் 15 பேருக்கே இடமளிக்கப்படவுள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ தவிர ஏனைய ராஜபக்ஷக்கள் அமைச்சரவையில் இடம்பெறமாட்டார்கள்.

அத்துடன், புதுமுக உறுப்பினர்கள் அமைச்சரவைக்கு உள்வாங்கப்படவுள்ளனர் என்றும் அறியவருகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பிணங்களை போன்று வேடமணிந்து ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி கோரிக்கை!

கொழும்பு, ஏப். 18

உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் 21 ஆம் திகதியுடன் 3 ஆண்டுகள் நிறைவடையவுள்ள நிலையில் , தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட சிலர் தமக்கான நியாயத்தைக் கோரி நேற்று கொழும்பில் வித்தியாசமான முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

6 பெண்களும் , இளைஞர் ஒருவரும் பிணங்களைப் போன்று ஆடையணிந்து , கருப்பு நிற பதாதையொன்றில் “நீதிக்காக” என்று எழுதி அதனை ஆடை மீது அணிந்து கொண்டு இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் தமது பெயர்களையும் குறித்த பதாதையில் எழுதி , பிறந்த தினம் மற்றும் இறந்த தினத்தை 2019 ஏப்ரல் 21 என்று குறிப்பிட்டிருந்தனர்.



கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னபாக அமர்ந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். பின்னர் அவர்கள் அங்கிருந்து காலி முகத்திடலுக்குச் சென்றனர். அங்கு ஜனாதிபதி செயலக வளாகத்தில் கொல்லப் பட்ட மற்றும் காணா மல் ஆக்கப் பட்ட ஊடகவியலாளர் களுக்கு நியாயம் கோரி , வைக்கப் பட்டிருந்தபதாதை களுக்கு முன் பாகவும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். (ஐ)

# இன்று நான்கரை மணி நேர மின்வெட்டு நடைமுறை!

கொழும்பு, ஏப். 18

இன்றைய தினம் நாடு முழுவதும் நான்கரை மணி நேர மின்வெட்டு நடைமுறையாகும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜீ, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையான காலப்பகுதிக்குள் 3 மணித்தியாலங்களும், மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலப்பகுதிக்குள் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின் துண்டிப்பு அமுலாகவுள்ளது.

இதேபோல், நாளையும் நாளை மறுதினமும் நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் 4 மணித்தியாலங்களும் 50 நிமிடங்கள் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி, ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜீ, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி, டபிள்யூ வலயங்களுக்குட்பட்ட பகுதிகளுக்கு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும், மாலை 6 மணி முதல் இரவு 10.30 மணி வரையான காலப்பகுதிக்குள் ஒரு மணித்தியாலமும் 30 நிமிடங்களும் மின்துண்டிப்பு அமுல்படுத்தப்படவுள்ளது. (ஐ)

# பாராளுமன்றில் 41 உறுப்பினர்கள் சுயாதீனமாக செயல்பட தீர்மானம்!

## திஸ்ஸ விதாரண எம். பி.



கொழும்பு, ஏப். 18

“அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனமாக செயல்படும் 41 பேர் பாராளுமன்றில் ஒரு குழுவாக அமர்வதற்கு ஆசன ஒதுக் கீட்டை ஏற்படுத்திக்கொடுக்கு மாறு சபாநாயகரிடம் கோரவுள்ளோம். அரசாங்கத்தின் செயல்பாடுகள் அதிருப் தியளிக்கின்றன. மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் செயல்படவில்லை”, என லங்கா சமசமாஜக்கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார்.

சிறீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் இருந்து விலகிய 11 பங்காளி கட்சிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகத்தையும், அவர் தலைமையிலான அரசாங்கத்தையும் நாட்டு மக்கள் ஏன் ஒன்றிணைந்து வெறுக்கிறார்கள் என்பதை ஜனாதிபதி இன்னும் விளங்கிக் கொள்ளவில்லை. மக்களின் வெறுப்பை பெற்றுக் கொண்டு ஆட்சியதிகாரத்தை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்ல முடியாது என்பதற்கு இலங்கை அரசியல் வரலாற்றில் பல சம்பவங்கள் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்னைகளுக்கு தீர்வு காண இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்து குறுகிய கால கொள்கை அடிப்படையில் செயற்படுவது அவசியமானதுடன், வெகுவிரைவில் பொதுத்தேர்தலை நடத்தி மக்களின் அபிலாசைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதையும் ஜனாதிபதிக்கு வலியுறுத்தினோம்.

புதிய பிரதமரின் கீழ் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபித்து மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க ஜனாதிபதி அவதானம் செலுத்தவில்லை. மக்களினால் வெறுக்கப்படும் அமைச்சரவையையே மீண்டும் நியமிக்க அவர் அதிக அவதானம் செலுத்தியுள்ளார். கொள்கைக்கு முரணாக ஆட்சியாளர்கள் செயற்பட்டதன் காரணத்தினால் அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகிறோம் - என்றார். (ஐ)

# பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும்!

## அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்து



கொழும்பு, ஏப். 18

மகா சங்கத்தினரின் ஆலோசனைகளுக்கு மதிப்ப ளித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண் டும், காலி முகத்திடலில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களின் கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளிக்காவிடின் அது பெரும்விளைவுகளை ஏற்படுத் தும் என்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவ கொள்கையால் நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்க்கொண்டுள்ளார்கள்.

சுபீட்சமான எதிர்கால கொள்கைக்கு முரணாக செயல்பட்டதன் விளைவை அரசாங்கம் தற்போது எதிர்கொள்கிறது.

அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு பாராளுமன்ற மட்டத்தில் தீர்வு காண முடியாமல் இருப்பதற்கு அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் பிரதான தடையாக உள்ளது.

இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக 20 ஆவது திருத்தத்தை நீக்கி 21ஆவது திருத்தத்தை கொண்டு வருவதற்காகவே இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதையும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதையும் மகாசங்கத்தினர் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார்கள். மகாசங்கத்தினரது ஆலோசனைக்கு மதிப்பளித்து பிரதமர் பதவி விலக வேண்டும்.

காலி முகத்திடலில் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் இளம் தலைமுறையினரது கோரிக்கைக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும்.

மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். மக்களின் ஜனநாயக போராட்டம் இறுதியில் இராணுவ போராட்டமாக மாற்றமடையுமா என்ற அச்சம் காணப்படுகிறது - என்றார். (ஐ)




# மரண அறிவித்தல்



தோற்றம் 31 - 12 - 1932

மறைவு 16 - 04 - 2022

## பொன்னு இராசையா

(கோல்டன் இராசையா)

திருநெல்வேலி, மாரியம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு இராசையா 16.04.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய பொன்னு - சீதேவகி தம்பதியரின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் அரசரட்ணம் (அவுஸ்ரேலியா), அரசலிங்கம், மகேந்திரன் (டென்மார்க்), இராஜரட்ணம், ஜெயரத்தினம், கருணாதேவி, குணரட்ணம் (டென்மார்க்), சேந்திமாலா - சந்திரராசா, இராஜேஸ்வரி - நவரட்ணம், கலையரசி - ஸ்ரீகாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் சன்சிகா பிரபாகரன் (Doctor), ரஜீவன் (Do), கௌசிகா, பிரசன்னா, திலக்சன், துர்க்காந்தி, சங்கீதா, ஜீனுஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் (19.04.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.